ஞானசம்பந்தம்

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

மலர் 44 | குரோதன ஆண்டு ஐப்பசித்திங்கள் 10-11-85 | இதழ் 12

கும்பகோணம் ஸ்ரீ ஆதிகும்பேசுவரசுவாமி திருக்கோயில்

மகாகும்பாபிஷேகம்

கோபுர திரிசனம் கோடி புண்ணியம்



கோபுர திரிசனம் "பாப விமோசனம்"

24—11—1985

தருமையாதினக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

தந்தையும் தாயும் தமர்களும்
போகமும் தாரணியும்
எந்தையும் எந்தன் உயிர்க்குமி
ரானும் இரவினுக்கே
சந்தையும் பெற்ற கமலா
லயனும் தனுவும்என்றன்
சிந்தையும் ஞானப் பிரகாச
தேசன் திருவடியே.

—ஞானப்பிரகாசமாலை 14

ஆசிரியர் :-
வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான்
சுவாமிகள்

துணையாசிரியர் :-
மகாவித்துவான்
சி.அருணைவடிவேல்முதலியார்

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 44 | 10–11–85 | இதழ் 12

உட்பொருள்

எண்		பக்கம்
1	கும்பகோணம் குடமுழுக்குக்காண வாரீர்!	... 847
2	தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை	... 851
3	ஞானப்பிரஸாதம்!	... 856
4	அபிராமி அந்தாதி	... 863
5	திருவருட்பாத் திரட்டு	867
6	அமெரிக்காவில் திருக்கோயில்கள்	... 871
7	அக்கராகாரம்	.. 879
8	திருஞானசம்பந்தர்	... 880
9	செய்திகள்	... 884
10	எதிர்காலம்	.. 887
11	'' ஞானசம்பந்தம் '' 44 ஆம் ஆண்டு மலர்ப் பொருளடக்கம்	i-iv
12	இதழ்வழிச் சைவசமயப் பயிற்சி-பாடம் -10	... 895

உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமை ஆதீனத் திங்களிதழ்

மலர் 44 | குரோதன – ஐப்பசி – 10–11–85 | இதழ் 12

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினுய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— திருஞானசம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

கும்பகோணம்
குடமுழுக்குக்காண வாரீர்!

அரவிரி கோடனீட லணி காவிரி யாற்றயலே
மரவிரி போதுமௌவல் மண மல்லிகை கள்ளவிழும்
குரவிரி சோலைசூழ்ந்த குழ கன்குட மூக்கிடமா
இரவிரி திங்கள்சூடி யிருந் தானவ னெம்மிறையே.

— ஞானசம்பந்தர்.

கோயில் நகரம் :

‘சோழநாட்டின் கோயில் நகரம்’ என்ற பெருமைக்குரியது கும்பகோணம். இந்து மதத்தின் இருபெரும் பிரிவுகளாகிய சைவம் மற்றும் வைணவத் திருக்கோயில்கள் பல இந்நகரத்தே உள்ளன. காவிரித் தென்கரைத் தலங்களுள் 26-வது தலம் கும்பகோணம், குடமூக்கு என்ற பழந்தமிழ்ப் பெயர்கொண்டது. இப்பெயரே மருவி கல்வெட்டுக்களுள் குடந்தைஎனநின்றது. பஞ்சக்குரோசத்தலங்கள் சூழ்ந்த திருக்குடந்தை தலையாய பதினன்கு கோயில்களையும் பதினன்கு தீர்த்தங்களையும் கொண்டிலங்குவது. கங்கை,யமுனை

முதலிய ஒன்பது புனித நதிகளும் வந்து வழிபடும் பெருமை இத் தலத்திற்குரியது. சிவராஜதானியாக விளங்கும் இத்தலத்தில் தேவாரப்பாடல்பெற்ற திருக்கோயில்கள் மூன்றுஉண்டு. இவற்றுள் ஒன்ருகிய அருள்மிகு மங்களாம்பிகை உடனுகிய ஆதிகும்பேசுவரர் திருக்கோயில் குடமுழுக்குப் பெருவிழா 24—11—85 ஞாயிறு காலே சீரும் சிறப்புமாக நடைபெறவுள்ளது. இதனையொட்டி இத்திருக் கோயிற்சிறப்புக்களுள் சிலவற்றை நேயர்களுக்கு ஞானசம்பந்தம் நினைவூட்டி மகிழ்கிறது.

முப்பெரும் கோயில்கள் :

குடந்தையில் தேவாரப்பாடல்பெற்ற சிவாலயங்கள் மூன்று என மேலே குறித்தோம். ஒன்று, குடமூக்கு எனக் குறிக்கப்பெறும் அருள்மிகு ஆதிகும்பேசுவரர் ஆலயம். இரண்டு, திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம் எனக்குறிக்கப்பெறும் அருள்மிகு பெரியநாயகி அம்மை உடனுகிய நாகேசுவரர் ஆலயம். மூன்று, திருக்குடந்தைக் காரோணம் எனக்குறிக்கப்பெறும் அருள்மிகு தேனார்மொழியம்மை உடனுய சோமநாதர்ஆலயம். நகரின் மேற்கில் கும்பேசர் ஆலயமும், நடுவில் நாகேசர் ஆலயமும், கிழக்கில் சோமநாதர் ஆலயமும் அமைந்துள்ளன. குடந்தைக்கீழ்க்கோட்டம், குடந்தைக்காரோணம் என்பன இந்நகரில் உள்ள வேறு சில சிவாலயங்களைக் குறிப்பன வாக அறிஞர் சிலர் கருதுவர். ஆயினும், குடமூக்கு என்பது ஆதிகும்பேசுவரர் ஆலயமே என்பதை அனைவரும் உடன்படுவர். இத்திருக்கோயில் இறைவர் கும்பேசர், அமுதகும்பேசர், ஆதி கும்பேசர் என வழங்கப்பெறுகிருர். இறைவி மங்களாம்பிகை. கல்வெட்டுக்களுள் இத்தலம் உய்யக்கொண்டான் வளநாட்டு வட கரையம்பூர்நாட்டுத் திருக்குடந்தை எனவழங்கப் பெற்றுள்ளது.

தேவாரப் பதிகங்கள் :

பிரமன், அகத்தியர், கிருதவீரியன், வீரவர்மன், இந்திரன் மாந்தாதா முதலியோர் வழிபட்டு உய்திபெற்றனர் எனக் குடமூக் குத் தலபுராணம் விரித்துரைக்கிறது. குடமூக்கிறைவனை திருஞான சம்பந்தர் ' அரவிரி கோடல்நீடல் ' என்றஒருபதிகத்தில் போற்றித் துதிக்கிருர். பஞ்சமப் பண்ணில் அமைந்த பதினொருபாடல்களைக் கொண்டஇப்பதிகம் மூன்ரும் திருமுறையுள் இடம்பெற்றிருக்கிறது. திருநாவுக்கரசர் ' பூவணத்தவன் புண்ணியன் ' என்றுதொடங்கும் பத்துப்பாடல்களால் இவ்விறைவனைப் போற்றுகின்ருர். ஐந்தாம் திருமுறையாகிய திருக்குறுந்தொகையுள் இப்பதிகம் இடம் பெற்றிருக்கிறது. திருஞானசம்பந்தர் காவிரி வளஞ்சூழ்ந்த இந் நகரின் இயற்கை எழிலைப் பெரிதெடுத்துப்பாடுகின்ருர். ' குடமூக் கிடமா இருந்தான் அவன் எம் இறையே ' எனப் பாடல் தோறும் போற்றுகின்ருர் திருநாவுக்கரசர்.

" துறவி நெஞ்சின ராகிய தொண்டர்காள்
பிறவி நீங்கப் பிதற்றுமின் பித்தராய் " என்றும்,

" தொண்டராகித் தொழுது பணிமினோ
பண்டை வல்வினைப் பற்றற வேண்டுவீர் " என்றும்,

" காமியஞ் செய்து காலங் கழியாதே
ஓமியஞ் செய்தங் குள்ளத் துணர்மினோ "

என்றும் பாடியருளி, பிறவிநீங்கவும், வினை அகலவும், உலகியல் பற்றறவும் இத்தலத்திறைவனை வணங்க வழிகாட்டுகின்றார். தலபுராணம், இறைவன் - இறைவிமீது பாடப் பெற்ற பிற்காலப் பிரபந்தங்கள் - அருணகிரியாரின் திருப்புகழ் க்ஷேத்திரக்கோவை பிள்ளைத்தமிழ் மற்றும் சில தனிப்பாடல்கள் இத்தலத்திற்குஉரியன.

மகாமகத் தீர்த்தம் :

இத்தலத்தில் உள்ள தீர்த்தங்கள் பதினான்கனுள் தலைசிறந்தது மகாமகக்குளம் என்பது. இக்குளத்தின் வடகரையில் அமைந்துள்ளதே குடந்தைக் காரோணம் என்பர் ஒருசாரார். தமிழ்நாட்டின் தலையாயதீர்த்தங்களுள் ஒன்று மகாமகக்குளம். பன்னிரண்டுஆண்டுகளுக்குஒருமுறை இத்திருக்குளத்தில் நிகழும் மகாமகம் நீராட்டு பெரிதும்சிறப்புடையது. குருபகவான் சிம்மராசியில் பிரவேசிக்கும் நாளில்நிகழும் இம்மகாமகநீராட்டில் தமிழ்நாட்டிலிருந்தும்,தென்-வடமாநிலங்களிலிருந்தும் லட்சோப லட்சம் மக்கள் வருகைதந்து நீராடுவர். வடநாட்டில் நிகழும் 'கும்பமேளா' வை ஒத்தது இந் நீராட்டு என வரலாற்றறிஞர்கள் குறிக்கின்றனர். இந்தியப்புனித நதிகள் அனைத்தும் அன்று இத்திருக்குளத்தில் நீராடிப் புனித மெய்துவதாகக் கூறுவர். இதுவன்றி ஆதிகும்பேசர் ஆலயத்தின் கீழ்பால் உள்ள பொற்றாமரைத் தீர்த்தமும், காவிரியும் சிறந்த தீர்த்தங்களாகக் கருதப் பெற்று வருகின்றன. இதனைத் திருநாவுக்கரசர் 'காவிரிநல் யமுனை கங்கை சரசுவதி பொற்றாமரை புட்கரணி தெண்ணீர்க் கோவியொடு குமரிவரு தீர்த்தம் சூழ்ந்த குடந்தை' எனக் குறித்தருளுவார்.

வரலாற்றுப் பின்னணிகள் :

குடந்தை மாநகர் வரலாற்றுச்சிறப்பு மிக்கது. பெரியபுராணத்தின் அடியார்களுள் ஒருவராகிய மூர்க்க நாயனார் வாழ்ந்த தலம் இது. இந்நகரைச்சுற்றி நாற்றிசைகளிலும் புகழ்மிக்க சைவ-வைணவத்தலங்கள் பலவுள்ளன. முருகனின் அறுபடைவீடுகளுள் ஒன்றான - ஏரகம் எனக்குறிக்கப்பெறும் சுவாமிமலை இத்தலத்தின் மேற்கே ஐந்து கல்தொலைவில் அமைந்துள்ளது. திருவலஞ்சுழி, திருஇடைமருதூர், திருநாகேசுவரம் முதலிய சிவதலங்கள் இந் நகரைச்சுற்றி அமைந்துள்ளன. சோழர்களின் தலைநகரங்களுள்

ஒன்றாகிய பழையாறை இந்நகருக்கு மிக அருகில் அமைந்துள்ளது. சோழர்கோயிற்பணிகளின் சிறப்புக்குக் கட்டியங்கூறுமதாராசுரமும் திரிபுவனமும் இந்நகரின் மிகஅருகில் திகழ்கின்றன. வரலாற்றுப் புகழ்மிக்க குடமூக்குப்போர் நிகழ்ந்த இந்நகருக்குமிகஅருகிலேயே, பிற்காலச்சோழர் எழுச்சிக்குக் காரணமாகிய பெரும்போர் நிகழ்ந்த திருப்புறம்பயமும் அமைந்துள்ளது. அளவற்ற பெருமை மிக்க இத் திருநகர் முத்தமிழ்வாணர் பலரைப் பெற்றுத்தந்து கலைவளர்த்த பெருமையும் மிக்கது.

காமகோடிப் பொன்விழாப்பணி :

இத்திருநகரின் மேல்பால் கோயில்கொண்டு அருள்வழங்கும் அருள்மிகு மங்களாம்பிகை உடனுகிய ஆதிகும்பேசுவரர் திருக் கோயில், காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜயேந்திர சரசுவதி சுவாமிகளின் பெரும்பொருளுதவியுடனும், அவர்களின் பொன் விழா துணைக்கமிட்டியினரின் அரிய முயற்சியோடும், அன்பர்களின் பொருள் உதவியோடும், இராஜகோபுரம் உட்பட முழுவதுமாகத் திருப்பணிகள் செய்விக்கப்பெற்று எதிர்வரும் 24–11—85 ஞாயிறு அன்று காலை குடமுழுக்குக் காணவிருக்கிறது. நமது சமயம்- பண்பாடு-கலை-நாகரிகம் ஆகியவற்றின் அழியாச் சின்னங்களாக விளங்கும் திருக்கோயில்களைத் தம்பொன்விழா ஆண்டை ஒட்டித் திருப்பணி செய்வித்துக் குடமுழுக்குக் காணவேண்டுமென்று திருவுளங்கொண்ட ஸ்ரீ ஜயேந்திரசரசுவதி சுவாமிகட்குத் தமிழகம் நன்றி செலுத்தும் கடப்பாடுடையது. அவர்கள் திருவுளப்பாங்கின் படிகுடந்தை - பொன்விழா துணைக்கமிட்டியின் தலைவராக அமர்ந்து அரியபணிகள் ஆற்றிவரும் திரு. கே. ஜி. இராமநாதன் அவர்கள் சைவப்பெருமக்களின் பாராட்டுக்குரியவர். கமிட்டியின் செயலர்கள் திரு. எஸ். சுவாமிநாதன், திரு. எச். இராசகோபாலன் (ரமணி) பொருளர்கள் திரு. எஸ். பி. எல். சுப்பிரமணியன் செட்டியார் (சுப்பு) திரு. எஸ். காளிதாஸ் பெங்களூர் திரு. எம். வி. ஜயராமன் குடந்தை திரு. எஸ். சுந்தரேசன் செட்டியார் முதலிய உறுப்பினர் கள் அனைவருடைய பணிகளும் பாராட்டத்தக்கன.

குடமுழுக்குக் காணவாரீர் !

சைவப்பெருமக்கள் நமது சிவாலயங்களைக் கண்ணெனப் போற்றிப் புரப்பதோடு, இத்தகு முயற்சிகளுக்குப் பொருளாலும் செயலாலும் உரிய ஒத்துழைப்பு நல்கும் கடப்பாடுடையவர்கள். குடமுழுக்கு விழாவுக்குப் பக்கதுணையாகநின்று, விழாவில்பங்கேற்று அருள்மிகு மங்களாம்பிகை உடனுகிய ஆதிகும்பேசர் மலரடிகளைத் தொழுது இம்மை மறுமை அம்மை என்ற மும்மைப் பயனும் பெற்று உய்வார்களாக !

பொருள் கொடுத்து அருள்பெற்றுப் புகழ்பெறவாரீர் !
மருள் கெடுத்து மாதீர்த்தம் ஆட்டும் காட்சி காணவாரீர் !

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

மயிலாடுதுறை – கூறைநாடு

அருள்மிகு புனுகீசுவரசுவாமிதிருக்கோயிலில்நடைபெற்ற கூறைநாடு சிவனடியார் திருக்கூட்டம் ஆதிவாரவழிபாடு 31 ஆம் ஆண்டு நிறைவு விழாவிற்கு எழுந்தருளி வழங்கியருளிய

ஆசியுரை

22—9—1985

"நிலைமை சொல்லுநெஞ் சே! தவ மென்செய்தாய்
கலைகள் ஆயவல் லான்கயி லாயநன்
மலையன் மாமயி லாடு துறையன்நம்
தலையின் மேலும் மனத்துளும் தங்கவே" — அப்பர்

ஊர் – பெயர்க்காரணம் :

கூறைநாடு தமிழகத்திலுள்ள பழம் புகழ்பெற்ற ஊர்களில் ஒன்று. ஜாதிகளின் பெயர்கள் தொழில்களின் அடிப்படையில் அமைந்தமைபோலவே சில ஊர்களின் பெயர்களும் அங்கு உருவாகும் பொருள்களின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன. துகிலி, கூறைநாடு என்பன இவ் வரிசையில் பெயர்பெற்ற ஊர்கள். துகில் என்பதற்கும், கூறை என்பதற்கும் உடை என்பதுபொருள். சுந்தரமூர்த்தி சுவாமிகள் 'இம்மையே தரும் சோறும் கூறையும்' என்னும் தொடரில் 'கூறை' எனும் சொல்லை உடை எனும் பொருளில் எடுத்தாளுகின்றார். அப்பர் சுவாமிகளால் "துகிலுடுத்து பொன் பூண்டு திரிவார்" என்னும் மறுமாற்றத் தாண்டகத் தொடரில் துகில் என்பது உடை என்னும் பொருளில் ஆளப்பட்டுள்ளது. உடையை நெய்து தரும் தொழிலைச் செய்வோர் இந்தப் பகுதியில் அதிகமாக வாழ்ந்து வருவதால் அவ்வடிப்படையில் அவர்கள்

வசிக்கும் பகுதி 'கூறைநாடு' என்று வழங்கப்பெற்றது. இது இன்று மக்கள்வழக்கில் கொரநாடு என்று வழங்கப்படுகிறது. ஊர்களின் பெயர்கள் பல இன்று உருமாறிப் பொருள் தொடர்பற்று வழங்கப்படுகின்றன. இந்நிலை ஏன் உருவாயிற்று? அடிப்படைக் காரணம் மக்களின் சோம்பலே ஆகும். உழைப்புக்குறைகிற பொழுது உள்ளதும் குறைகிறது. இது இன்று எல்லாத் துறைகளிலும் இருக்கிறது. சமயத்துறையிலும்சரி! சமுதாயத்துறையிலும் சரி! எல்லோருக்கும் முன்னேறவேண்டும் - பொருள் பெறவேண்டும் புகழ் பெறவேண்டும் - எனும் ஆசை அதிகம் இருக்கிறது. ஆனால் அதற்குத்தக்க உழைப்பு உள்ளதா? என்றால் இல்லை. இதனையாரும் சிந்திப்பதில்லை. தளராஉழைப்பும் தகுதியும் வளர்ச்சியும் குறைகிற பொழுது பலன் எப்படிவரும்? இதை அனைவரும் ஆழ்ந்துசிந்தித்தல் அவசியமாகும்.

நித்தம் செல்வதை நியமமாக் கொள்க :

சிவனடியார் திருக்கூட்ட அன்பர்கள் சமயப்பணி செய்யவும் சமுதாயப்பணி செய்யவும் சோம்பல் கொள்ளுதல் கூடாது. அப்பரடிகள்,

> '' நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
> நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
> புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
> பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
> தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
> சங்கரா சயபோற்றி போற்றி என்றும்
> அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதீ என்றும்
> ஆரூரா என்றென்றே அலறு நில்லே ''

என்றருளுகின்றார். வாரந்தொறும் திருக்கோயிலுக்குப் போவது என்பதைவிட நித்தலும் செல்ல வேண்டும் என்னும் மனநிலை வளர்தல் அவசியம். அங்குச் செல்வதுடன் மட்டுமல்லாது அலகிடும் மெழுக்குமிட்டும் பூமாலைபுனைந்தேத்தியும் வழிபடவேண்டும்.

வழிபாட்டுக் கூட்டங்களில் கலந்துகொள்வோர்க்கு இப்பயிற்சி ஆண்டுக்காண்டு வளர்ச்சிபெற வேண்டும்.

யார் பக்தன் ?

எனவே எங்கும் உழைப்பு - எதிலும் உழைப்பு என்றிருத்தல் முக்கியம். '' உனக்குப்பணி செய்ய உன்றனை எந்நாளும் நினைக்க

வரம் எனக்குநீதா'' என்று தருமையாதீன ஆதிபரமாசாரிய மூர்த்திகள் அருளுகின்றார்கள். 'என்கடன் பணி செய்து கிடப்பதே' என்கிறார் அப்பரடிகள். தாயுமானசுவாமிகளும், 'அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டுவிட்டால் - இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே' என்றருளுகின்றார். பிறர் உழைத்து, அதில், தான்வாழ்வதை எப்பொழுதுமே சமயம் அறிவுறுத்தியதில்லை. பிறர் உழைப்பில் வாழ்வோன்பக்தனே அல்லன். இதைத்தான் ''உழைப் பிற்கேற்ற ஊதியம்'' என்றனர் உலகோர். ''அவரவர் வினைவழி அவரவர் அனுபவம்'' எனவும், ''சும்மாவருமோ சுகதுக்கம்'' எனவும் அருளினார் நம் குருஞானசம்பந்தரும்.

உழைப்பின்மை உயர்வைக் குறைக்கும் :

உழைக்க மறுக்கும் அன்பர்கள் இன்று இருப்பதால்தான் திருக்கோயில்கள் பல சீர்குறைந்து காணப்படுகின்றன. அன்றைய சமுதாயத்தில் இந்த அளவு வானளாவிய கோபுரங்கள் எழும்பி உள்ளதற்குக் காரணம் அரசனின் ஆணை மட்டுமா? இல்லை! மக்களின் எழுச்சி மிக்க பக்தியுணர்வும் காரணம் ஆகும். அந்த ஆர்வமும் உழைப்பும் இன்று எங்கே போயின? சிந்தித்துப் பாருங்கள்! அதில் பாதியளவு இன்றுள்ளோர் மத்தியில் இருந்தால் கூடத் திருக்கோயில்கள் இன்று இந்த அளவு சீர்மை குறைந்து காணப்படா என்பதுண்மை. சிந்தியுங்கள்! செயல்படுங்கள்! சிறப்புறுவீர்கள்.

உண்மை இல்லை :

இன்றுள்ள மக்களிடம் வழிபாட்டுணர்வு அதிகமாக இருப்பது போலத்தோன்றுகிறது. இதில்உண்மைஇல்லை; தங்களைஈடுபடுத்திக் கொள்ளும் தன்மை இல்லை. இக்குறை இதுபோன்றகூட்டங்களின் மூலமாகவாவது நீங்குதல் இன்றியமையாததாகும். செயல், எங்ஙனம் உள்ளது என்பதோடு அச்செயலைச் செய்யத் தூண்டும் அடிப்படை மனம் எப்படித்தூயதாய் உள்ளது என்பதையும் ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தல் அவசியம். மனம் தூயார்க்கு எச்சம் நன்றாகும் என்பார் திருவள்ளுவர். வழிபாட்டில் மனம், வாக்கு, காயம் என்ற முக்கரணங்களும் தூயதாயிருத்தல் வேண்டும். அதற்குப் பயிற்சிதரும் அமைப்புக்களாகவே வார வழிபாட்டுக் கழகங்கள் திகழவேண்டும்.

தாமன் மகளின் தூய வாழ்வு :

தூயவாழ்விற்கு ஓர் எடுத்துக் காட்டைச் சொன்னால் பொருத்தமாக இருக்கும். திருஞானசம்பந்தர் திருமருகலில் ஓர் அற்புதம்

செய்தருளினர். அவரா செய்தார்? அவரைக் கருவியாக வைத்து ஆண்டவன் திருவிளையாடல் புரிந்தருளினர்.

வைப்பூர் எனும் ஊரில் வாழ்ந்த தாமன் எனும் வணிகனின் ஏழாவது புதல்வி தன்தந்தையின் பேராசையை எண்ணித் தன் முறை மாமனுடன் இரவு நேரத்தில் ஊரை விட்டுப்புறப்பட்டு உடன் போக்குச் செல்கின்ருள். திருமருகல் எனும் ஊரில் சத்திரத்தில் இருவரும் தங்குகின்றனர். அன்று இரவு அரவு தீண்டி மாமனுகிய அவன் இறந்து விடுகின்ருன். அவள் அரவு தீண்டிய அவனைத் தான் தீண்ட இயலாதவளாய் அழுது புலம்புகின்ருள். அவ்வமயம் விடியற்காலைப் பொழுது. திருஞானசம்பந்தர் அவ்வழியே திருக் கோயிலுக்கு வந்தவர் இவளின் அழுகுரல் கேட்டு அடியவர்களுடன் அங்குச்சென்று விசாரித்து உண்மை அறிகின்ருர் உடனே இறைவனை நோக்கி இப்பெண்ணிற்காகப் பதிகம் பாடியருள்கின்ருர். இறையருளால் அம்முறைமாமன் தூங்கி எழுந்தவன் போல எழுகின்ருன். பிறகு திருஞானசம்பந்தர் அவர்கள் இருவருக்கும் திருமணம் நிகழ்த்தியருள்கின்ருர்.

திருஞானசம்பந்தர் நிகழ்த்திய இதுபோன்று அற்புதங்கள் எல்லோருக்கும் நிகழ்ந்தனவா? இல்லை. இப்பெண்ணின் வாழ்க்கையில் மட்டும் இது ஏன் நிகழ்ந்தது? இதற்குக் காரணம் அப் பெண்ணின் தூய தகுதியே ஆகும். அவள் தந்தை முறைமாமனை ஏமாற்றிவந்த நிலையை அறிந்து அதற்குத் தீர்வு காண முற்பட்டு உடன்போக்கு மேற் கொண்டாளே தவிர காதல் வெறியாலல்ல. இவ்வரலாற்றில் வணிகப்பெண்ணின் கடமையுணர்வே மேலோங்கி யுள்ளதை அறிதல் அவசியம். முறைமாமனுகிய அவன் முதல் பெண்ணையே மணம் புரிந்துகொள்ளத் தகுதியுடையவனுயிருந்தான் என்பதனுல் அவனுக்கும் இவளுக்கும் வயது வேறுபாடு அதிகமாக இருக்குப என்று தெரிகிறது. எனவே இங்குக் காதல் காரணம் இல்லை என்று புரிகிறது. தன்முறைமாமனை ஏமாற்றக் கூடாது எனும் கடமையுணர்வே தலைநின்றது என்று அறிய முடிகின்றது. அரவு தீண்டியும் தான் தீண்டாத் தகைமையுடையவளாயிருந்தத ஞல் பண்பட்ட உள்ளம் புலப்படுகிறது. அழும்பொழுது சடையை யுடையவனே என்றும் நீயே சரண் என்றும் அறமாகிய விடையை உடையவனே என்றும் அழுதாளேயன்றி உற்ருரையோ உறவினரையோ அழைத்து அழவில்லை; ஆதலின் துன்ப நேரத்திலும் இறைவனையே போற்றித் துதிக்கும் அவளது பக்தியுணர்வுநமக்குப் புலனுகின்றது. இத்தகைய அன்புணர்வும் பண்புணர்வும் பக்தியுணர்வும் கடமை உணர்வும் அவள் கொண்டிருந்ததனுல் தான் அவளுக்காகத் திருஞானசம்பந்தர் பதிகம் பாடிப் பரமன் அருளைப்

பெற்றுத்தந்தார். திருஞானசம்பந்தர் திருப்பதிகத்தில் ஒரு பெண்ணின் அழுகுரல் பதிவாகியுள்ளது என்றால் அப்பெண்ணின் தகுதியை என்னென்பது? அத்தகுதியே இன்று ஆண் பெண்ணாகிய எல்லோரிடமும் வேண்டத்தக்கது.

புனுகீசரைப் போற்றுவீர் :

ஐந்தறிவு படைத்த புனுகுபூனை வழிபட்டு அருள்பெற்றதால் இத்திருக்கோயிலில் உள்ள இறைவன் புனுகீசர் எனப் பெயர் பெற்றார். விலங்கினத்தைச் சேர்ந்த புனுகுபூனையே ஒன்றியிருந்து தன்னுடம்பில் உண்டாகும் நறுமணம் நிறைந்த புனுகுசட்டத்தை இறைவன் திருமேனிமீது சேர்த்தி வழிபட்டு அருள்பெற்றது. இது இத்தலத்தின் வரலாறு. ஆனால் ஆறறிவு படைத்த மனிதஇனம் என்னசெய்யவேண்டும்? இது கேள்விக்குறியாகவே இருந்துவிடக் கூடாது. விடைகாண வேண்டும். விடைதான், முக்கரணத் தூய்மை, முக்கரண உழைப்பு, முக்கரண வழிபாடு. இதைத்தான் புனுகுபூனை செய்து பயன்பெற்றது.

தாமன்மகள் வழிகாட்டினாள். வழிபாட்டுக்கழகமும் வழிகாட்டு கின்றது. வழியைத்தவறவிடாது வழிபட்டு வாழ்வீர்களாக.

வாழ்த்து :

இத்தகுதியும் அசைவிலா உறுதியும், உழைப்பும் கொண்டு அன்பர்கள் வாழ்ந்து இம்மையின்பமும் மறுமையின்பமும் வீட்டின்ப மும் பெற்றுய்வார்களாக! இன்று இத்திருக்கூட்டத்தில் கலந்து கொண்டுள்ள அன்பர்கள் அனைவரும் நலம் பல பெற்று நீடுவாழ வும், 31 ஆவது ஆண்டு நிறைவு விழாக்கொண்டாடும் கூறைநாடு சிவனடியார் திருக்கூட்டம் நூறாண்டுகள் பல கண்டு சிறக்கவும் எல்லாம் வல்ல ஸ்ரீ செந்தமிழ்ச்சொக்கன்திருவருளைச் சிந்திக் கின்றோம்.

முயற்சித் திருவினை ஆக்கும்
உழைப்பே உயர்வு தரும்.

ஞானப் பிரஸாதம்!

திரு. ஆதி. பாலசுந்தரன்,
பொன்மலைப்பட்டி, திருச்சிராப்பள்ளி.

"இனிமே ரெண்டுல ஒண்ணு பாத்ரணும் தலைவரே!"

சைலப்பன் கோஷ்டியினர் சைலப்பனை முடுக்கிவிட்டார்கள்.

"எங்கோவத்த அதிகமாக்றீங்க! அவ்வளவுதான் சொல்வேன்!"

சொல்லிக்கொண்டே கட்டிலில் இருந்துஎழுந்தான் சைலப்பன்.

"அந்தத் தர்மகர்த்தா கொளந்தவேலு இண்ணக்கி நம்ம மொகத்ல கரிய பூசிட்டாரு தலைவரே!..."

"ஆமா! இப்ப வாய்கிழியப் பேசறீங்க எல்லாரும். அந்தச் சமயத்ல ஒங்களுக்கெல்லாம் வாய் எங்க போச்சு!... எங்கிட்ட வாங்கித் திங்கறதுக்கு மட்டும் ஒங்களுக்கு வாய் இருக்கா!..."

"வெண்டக்கா முத்னப்புல, வெவகாரத்த முத்த உட்டுட்டோம் தலைவரே! நீங்க கம்னு இருங்க. நாங்க பாத்துகிடறோம் தலைவரே!"

சைலப்பனைச் சமாதானப் படுத்துவதற்காக அவனுடைய கோஷ்டியினர் பேசிய பேச்சு இது.

கொடுத்த காசுக்கு அவர்கள் அவ்வளவுதான் பேசுவார்கள்.

எஜமான் தயவு தேவையென்றால், அவனுடைய நாய்க்குக்கூட உணவு வைப்பான் சைலப்பன்; அப்படிப்பட்ட ஆசாமி!

குளிர் என்று வந்து விட்டால் அழுக்குத் துணிகூட அவசியந் தானே!

ஒப்புக்குப் பேசிய அந்தக் கோஷ்டியினர் எல்லாரும் கிளம்பிப் போய்விட்டார்கள்.

காசு கொடுத்து மரியாதையை வாங்கிவிடலாம் என்று எண்ணினன் சைலப்பன். இப்போது முடியவில்லை.

ஆத்திரத்தில் அவனுடைய உடம்பு நடுங்கியது. கட்டிலில் உட்கார்ந்து விட்டான்.

கோபத்தோடு எழுந்து நஷ்டத்தோடு உட்கார்ந்ததுதான் மிச்சம்.

ஜன்னல் வழியாகத் தோட்டத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். ஆத்திரமும் கோபமும் அவனை வெறியனாக மாற்றின.

சைலப்பன் இளைஞர் மன்றச் செயலாளர். அவன் சேர்ந்திருந்த கட்சியும், வேலை இல்லாத இளைஞர் கூட்டமும் அவனுக்குப் பக்க பலம். அந்த ஊரில் அவனும், அவனுடைய கோஷ்டியினரும் வைத்ததுதான் சட்டம்.

நியாயமோ அநியாயமோ அதைப் பற்றியெல்லாம் அவன் கொஞ்சம்கூட கவலைப்படமாட்டான். இளைஞர்களின் கூட்டத்தைத் திரட்டுவான். எங்கே வேண்டுமானாலும் போவான். அழிச்சாட்டியம் பண்ணுவான்.

சற்று நேரத்துக்கு முன்னால் நடந்த சம்பவம் அவனுக்கு ரத்தக் கொதிப்பை அதிகமாக்கியது.

அன்றைக்கு ஐப்பசி விஷு. கிளாக்குளம் பூமிநாதசுவாமி கோயிலில் தேர்த்திருவிழா. தேரோட்டம் ஆரம்பம் ஆகக் கூடிய நேரம்.

தேரில் அமர்ந்திருந்த குருக்கள் தீபாராதனை காட்டிமுடித்தார்.

கோயில் தர்மகர்த்தா குழந்தைவேலு தேரின் முன்னால் நிற்கிறார். ஊரிலுள்ள பெரியவர்களும் நிற்கிறார்கள். குருக்கள் விபூதிப் பிரசாதம் கொடுத்தார். இரண்டு கைகளாலும் வாங்கி, பூமியில் விழாமல் நிமிர்ந்து நெற்றியில் நிறையப் பூசிக்கொண்டார் தர்மகர்த்தா.

தேர்வடத்தைப் பிடிப்பதற்கு எல்லாரும் தயாராக இருக்கிறார்கள்.

"அரோகரா!... அரோகரா!..." முழக்கம்; நாலாப்பக்கமும் எதிரொலிக்கிறது. அதிர்வேட்டுச் சப்தம் செவியைப் பிளக்கிறது.

எல்லாரும் குனிகிறார்கள்; வடக் கயிற்றைத் தொடப் போகிறார்கள்.

திடீர் என்று திருவிழாக் கூட்டத்தில் பரபரப்பு. ஒரே கூச்சல்! குழப்பம்!

"நிறுத்துங்க!.. நில்லுங்க!.. இதை எல்லாருக்கும் குடுத்துட்டுதான் வடக்கயத்தை தொடணும்..."

கத்தியவர்கள் சைலப்பன் கோஷ்டியினர். கத்திக் கொண்டே நோட்டீஸ்களை அள்ளிக் கூட்டத்தினர் மீது வீசி எறிந்தார்கள்.

தர்மகர்த்தா குழந்தைவேலுவின் முன்னால் இளைஞன் ஒருவன் நோட்டீஸை நீட்டினான்; கோபத்துடன் கையில் வாங்கினார் தர்மகர்த்தா.

தர்மகர்த்தா குழந்தைவேலு நியாயமும், நேர்மையையும் உணர்ந்தவர். தினசரி ஸ்நானம் முடித்து சிவபூஜை செய்யாமல் சாப்பிடமாட்டார். சிவபுராணம் பாராயணம் செய்வதைக் கடமையாகக் கொண்டவர். திருமுறைகளில் அழுத்தமான ஈடுபாடு அவருக்கு உண்டு.

"சின்ன வயசில எனக்கு டைபாய்டு காச்சல் வந்துது. அப்போ இங்க்லீஷ் மருந்தெல்லாம் கெடையாது. ஞானசம்பந்தப் பெருமானோட 'திருநீற்றுப் பதிகம்' சொல்லிச் சொல்லி, எங்கப்பா விபூதி எனக்குப் பூசுவா. அதுதான், நான், இண்ணக்கி உயிரோட இருக்கேன் என்று நம்பிக்கையோடு அடிக்கடி சொல்வார்.

திருநீற்றைக் குழைத்து மேனியில் இட்டிருப்பார். நெற்றியில் சந்தனப் பொட்டு எப்போதும் துலங்கும். மார்பிலே ருத்ராட்ச மணிமாலை அணிந்திருப்பார்.

சிவன்கோயிலோடு சம்பந்தம் வைத்திருந்தவர் அவர். ஆகவே, சைவசித்தாந்தம், சிவாகமங்கள் ஆகிய அருள் நூல்களிலே பயிற்சி உடையவர். நித்ய நைமித்திக கைங்கர்யங்கள் சிவாலயங்களில் தவறாமல் நடைபெற வேண்டும் என்பதிலே உறுதி உடையவர். 'சிவன் சொத்து குல நாசம்' என்பதில் அவருக்கு அசைக்கமுடியாத நம்பிக்கை உண்டு. செல்வ வசதி உடையவர். சிவாலயங்களைத் தம்முடைய செலவிலும், முயற்சியிலும் புனருத்தாரணம் செய்பவர்.

கையிலிருந்த நோட்டீசைப் படித்துப் பார்த்தார்.

அவருக்கு அதிர்ச்சி! .. கோபம்! ...

"இளைஞர் மன்றச் செயலாளர் சைலப்பன் தலைமையில் பூமிநாதசுவாமி கோவில் தேரோட்ட விழா நடைபெறும்" என்று அச்சடிக்கப்பட்டிருந்தது.

' தஞ்சைப் பெரிய கோவிலைக் கட்டினான் ராஜராஜன்; அவன் தலைமை தாங்கல. தென்காசி கோவில கட்டினான் பராக்ரம பாண்டியன்; அவன் தலைமை கேட்கல.

கோவிலுக்கும் இவங்களுக்கும் ஸ்நானப் பிராப்தி கெடயாது!. இவங்களுக்குத் தலைமையா!...

இடி விழுந்த கோபுரத்த சீர்ப்படுத்தறதுக்கு வக்கில்ல. இருக்கிற கோவில்கள கவனிக்கறதுக்குத் துப்பில்ல.

சிவாலயங்கள்ள தீபம் ஏத்தறதுக்கு வழி கெடயாது; கோவில்ல பூஜய காணோம். பாழடைஞ்சு கெடக்குது. இருக்கறதயும் கெடுத்துட்டாங்க!...

"கோவில் திருவிழாவுக்கு மனுஷன் தலைமையா! இது என்ன பழக்கம்! எல்லாருக்கும் பெரியவருப்பா சுவாமி! சுவாமிக்கு மேல மனுஷத் தலைமையா?...

மன வேதனை வார்த்தையாக வெளிவந்தது; குழந்தைவேலு கேட்டார்.

"முடியாது!... முடியாது!... தேர நகரவிட மாட்டோம்!...

இளைஞர்கள் கூச்சல் இட்டார்கள்.

"இதென்ன கட்சிக் கூட்டமா! இல்ல பொதுக் கூட்டமா!"

பொறுக்க முடியவில்லை தர்மகர்த்தாவால்; ஆவேசத்துடன் கேட்டார்.

"அதெல்லாம் முடியாது! எங்கக்கட்சிக் கொடிய தேர்மேல கட்டுவோம்!...

இளைஞர்கள் தங்கள் கையில் பிடித்திருந்த கட்சிக்கொடியை உயர்த்திப் பிடித்துக்கொண்டு ஆட்டினார்கள்.

பூமிநாதசுவாமி தலைக்கு மேல கட்சிக்கொடியா!... சுவாமிய விட கட்சிக்கொடி பெரிசா!

தர்மகர்த்தா கேட்ட கேள்விக்குப் பதில்இல்லை. மேற்கொண்டு பேச்சை வளர்த்து, இவர்கள் வாயால் 'அஷ்டோத்ரம்' கேட்க அவர் விரும்பவில்லை.

எதுவாக இருந்தாலும்சரி. பூமிநாதசுவாமி கவனித்துக் கொள்வார் என்ற நம்பிக்கையும், உறுதியும் அவரைப்பிடித்து உந்தித்தள்ளின. ஆவேசப்பட்டார்.

விபூதிச் சம்புடத்திலிருந்து விபூதியைச் சிறிது எடுத்து நெற்றியில் இட்டுக் கொண்டதும், அவரது படபடப்பு சற்றுக் குறைந்தது. அங்கவஸ்திரம் நெகிழ்ந்திருந்ததை இடுப்பில் இறுக்கிக்கட்டிக் கொண்டார்.

"எல்லாரும் வடக்கயத்தைப் பிடிங்கையா!... சொல்லுங்க!... 'தென்னாடுடைய—' என்று முழங்கினார். எல்லாரும் 'சிவனே போற்றி!' என்று மகுடமிட்டார்கள். 'எந்நாட்டவர்க்கும்' என்றதும் எல்லாரும் 'இறைவா போற்றி!' என்று முழங்கினார்கள்"

மீண்டும் 'அரோகரா' முழக்கம் எதிரொலித்தது. அதிர்வேட்டு ஒலி காதைப் பிளந்தது.

பக்தர்களின் எதிர்ப்பு வெற்றி பெறுகிறது. நிலையை விட்டு தேர் மெதுவாக நகர்கிறது.

சைலப்பனுக்குக் கோபம்!

தன்னுடைய கோஷ்டியின் பலம், இந்தச் சந்தர்ப்பத்தில் பிரயோஜனப் படாமல் போய் விட்டதே என்று ஆத்திரப்பட்டான்.

கட்சிப் பின்னணியில் கோவிலுக்குள் நுழைந்து கொண்டான் சைலப்பன்.

கோவில் சிற்பங்களையும், வெண்கல விளக்குகளையும் ஜீரணிக்கக் கூடிய நவீன குண்டோதரனாக மாறியவன்.

கோவில் நிலங்களையெல்லாம் சுருக்கிக்காட்டும் 'குவிலென்ஸ்' வயிறு அவனுக்கு உண்டு.

சைலப்பன் யோக்யதை தர்மகர்த்தாவுக்கு நன்றாகத் தெரியும்; ஊர் மக்களுக்கும் தெரியும். கோவில் சொத்துக்களையும், நிலங்களையும் சைலப்பன் கபளீகரம் செய்வதைத் தடுத்துப் பார்த்தார்கள்; முடியவில்லை.

ஏமாற்றி ஜெயிப்பதைவிட, கௌரவமாகத் தோல்வியடைவதே மேல் என்பது அந்த நல்ல ஜனங்களின் அபிப்ராயம்.

தேரோட்ட விஷயத்தில் சைலப்பன் தலையிட்டது வெற்றி பெறவில்லை.

வீட்டை நோக்கி வேகமாகநடந்தான் சைலப்பன். அவனுடைய கோஷ்டியினரும் பின்னாலேயே வந்தார்கள். ஆவேச வார்த்தைகளை அள்ளி வீசிவிட்டுப் போய்விட்டார்கள்.

வீட்டு ஜன்னல் வழியாக வெறியுடன் பார்த்துக் கொண்டிருந்தான் சைலப்பன்.

தேரோட்டத்தில் நடந்த சம்பவங்கள், தர்மகர்த்தா இவர்களெல்லாம் கண்முன்னே தோன்றித் தோன்றி மறைந்தனர்.

அவன் ஆக்ரமித்த கோவில் நிலத்தில் பயிர் செழிப்பாக வளர்ந்திருந்தது.

பயிரிலே பசுமை!..... அவனுடைய

கண்களிலே சிவப்பு! ...

அப்போது! ....

ஓர் உருவம் பயிருக்குள் நுழைவதைப் பார்த்தான். அவனுடைய கோப வெறிக்கு வடிகால் தேவை. ஏற்கெனவே, கோவில் தேர்த் திருவிழாவில் தோல்வி! கோபம்!

பாய்ந்து ஓடினன் அருகில், பயந்து ஓடியது அந்த உருவம்.

தடுப்பதற்கு வீட்டில் யாரும் இல்லை. ஓட ஓட விரட்டினன். அந்த உருவம் கோவில் மண்டபத்துக்குள் நுழைந்து ஓடியது.

ஓடிய வேகம்; மண்டபத்தில் பரப்பியிருந்த கல்தளம்; அந்த உருவம் கால் வழுக்கிக் கீழே விழுந்தது.

காலால் ஓங்கி ஒரு மிதி மிதித்தான். அந்த உருவம் மயங்கி விட்டது.

இடுப்பில் இருந்த கத்தியை எடுத்தான். கோவில் தூணில் தீட்டுவதற்காக நிமிர்ந்தான்.

கைகள் நடுங்கின; கத்தி கையில் இருந்து நழுவியது; அவன் மனம் அலைபாய்ந்தது.

என்ன காரணம்?......

"இந்தக் கோவிலுக்கு யாதொரு தீங்கும் வாராத வண்ணம் காப்பவர்களின் ஸ்ரீ பாதம் என் தலைமேலே......"

"இந்தக் கோவிலுக்கு ஏதாகிலும் ஒரு தீங்கு செய்தவர்கள், கங்கைக்கரையில் ஆயிரம் காராம்பசுவைக்கொன்ற தோஷத்திற்கு ஆளாவார்கள்"

கல்லில் செதுக்கப்பட்டிருந்த எழுத்துக்கள் அவனுடைய கருங்கல் மனத்தைக் கரைத்தன

திருக்கோவிலின் சாந்நித்ய விசேஷம்! அவனுடைய விலங்கு மனம் அழிய ஆரம்பித்தது.

அடியார்களின் எண்ணங்கள் நிறைந்த இடம் திருக்கோவில் அந்த மகிமையால், சைலப்பனுடைய மனித மனம் விழித்துக் கொண்டது. தாமச. ராஜச குணம் போய், சத்துவ குணம்வந்தது.

அதிர்வேட்டுச் சப்தம் கேட்டது. அந்த அதிர்ச்சியில், கீழே விழுந்த பசு எழுந்து ஓட ஆரம்பித்தது.

"கோவில் சொத்துக்களைக் கையாடினேன், தவறு செய்து விட்டேன்; கோவில் நிலங்களை அபகரித்துக் கொண்டேன். பாவம் செய்துவிட்டேன்..."

ஓடிச் செல்லும் அவனுடைய கால்களின் வேகத்தைக் காட்டிலும், அவனுடைய மனத்திரையில் அவன் செய்த பாவச்செயல்கள் எல்லாம். நிழற்படம் போல ஓடி வந்தன.

தன்னுடையவீட்டுக்குள்ஓடினன்...வெறிபிடித்தவனைப்போல... திருக்கோவில் நிலத்தைச் சொந்தமாக்கி, விளையவைத்துச் சேர்த்து வைத்துள்ள பணத்தையும், வாங்கிச் சேர்த்துள்ள நகைகளையும் வாரி எடுத்துக்கொண்டான்.

"தேர் வடம் பிடிப்பதைத் தடுத்தேன். அதற்குப் பிராயச் சித்தமாக, தேரின் வடத்தைப் பிடித்து இழுத்து நிலையில் சேர்ப்பேன்..."

புலம்பிக் கொண்டே ஓடினன்.

ஆனல், தேர் நிலையத்துக்கு வந்து விட்டது.

தேரின் வடக்கயிற்றைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டான்.

வேகமாகக் கோவிலுக்குள் ஓடினன். அவன் செய்த பாவச் செயல்கள், அவனுடையகால்களைக் கோவிலுக்குள் செல்லவிடாமல் பின்னுக்கு இழுத்தன.

மனத்திலே புயல்! மடியிலே பணம். திகைத்தான் ஒருகணம்!... பயந்து நின்ருன்.

"டாக்டரிடத்ல, அவர் தரக்கூடிய மருந்துல, நம்பிக்கை வைக்கிற நான், இந்தப் பூமிநாத சுவாமிய ஏன் நம்பக்கூடாது?.. சுவாமிய நிச்சயம் நான் நம்பறேன். என்னைக் கட்டாயம் மன்னிப்பார். இனிமே, நான் தவறே செய்ய மாட்டேன்; தவறே செய்ய மாட்டேன்.."

சொல்லிக்கொண்டே உள்ளே போன சைலப்பன், திருக் கோவில் கொடிக்கம்பத்துக்கு அருகில் வைக்கப்பட்டிருந்த திருப் பணி உண்டியலில் நகைகளைப் போட்டான்; பணத்தையும் போட்டு விட்டான்.

நெடுஞ்சாண் கிடையாகத் தெய்வத்தின் சந்நிதியில் விழுந்து எழுந்தான்.

"புழுவாய்ப் பிறக்கினும்" - தேவாரப் பதிகத்தை ஓதுவா மூர்த்திகள் பாடிக்கொண்டிருந்தார்.

குருக்கள் விபூதிப் பிரசாதம் கொடுத்தார்.

எந்த அரசனே எழுதி வைத்துள்ள கல்வெட்டு வாசகம் அவனுடைய விலங்கு மனத்தை மாற்றியது.

திருக்கோவிலின் விபூதிப் பிரசாதம் அவனுடைய மனித மனத்தை வெளியே கொண்டு வந்தது.

ஆம்! திருநீறு ஞானப் பிரசாதம்!

சைலப்பனுக்கு மட்டுமா?...

ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணியின் நினைவு சிறுகதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற கதை.

அபிராமி அந்தாதி

டாக்டர் புலவர் திரு. K. சந்தானராமன், M A., D. Lit., PH. D., D. P. P. A., D. U. N., I., U.
பருத்தியூர்

ககனமும் வானும் புவனமும் காணவில் காமன் அங்கம்
தகனம்முன் செய்ததவப் பெருமாற்குத் தடக்கையும்செம்
முகனும்முந் நான்கு இருமூன்று எனத்தோன்றிய
[மூதறிவின்
மகனும் உண்டாயதன்றே வல்லிநீ செய்த வல்லபமே.

அ. ககனமும் வானும் புவனமும் காண
வில்காமன் அங்கம் தகனம் முன்செய்த
தவப் பெருமான்.

(1) மேலுலகமும் விண்ணுலகும் மண்ணுலகும் காணும்படி வில்லையுடைய மன்மதனின் உடலினை முன்னொரு காலத்தில் எரித்த தவத்தில் வல்ல தலைவன் எனச் சிவபெருமானைப் புகழ்கிருர்.

(2) புவனம் என்பது நமது பூவுலகினையும், வானம் என்பது விண்ணுலகத்தையும் ககனம் என்பது அதற்கும் மேலுள்ள உலகங்களையும் குறித்தன. அறுபத்துநான்கு கலைகளைப்பற்றிக் குறிப்பிடும் நமது பண்டையநூல்கள் ‘ ஆகாய கமனம் ’ என்றும் ‘ ககனப் பிரவேசம் ’ என்றும்இருவேறு கலைகளைக் குறிக்கின்றன. அவற்றுள் ஆகாய கமனம் என்பது விண்வழியே ஊர்தியிலோ அல்லது ஊர்தியின்றியோ செய்யும் பயணம் ஆகும். ககனப் பிரவேசம் என்பது வெகுதொலைவு கடந்து சென்று வெளியில் நுழைந்து ஆராய்தலுமாகும். அதாவது ககனப்பிரவேசம் என்பது தற்கால Space Research என்ற அறிவியல் துறையினை ஒக்கும்.

(3) காமனை எரித்த புகை கயிலை முற்றும் சூழ்ந்தது. வான வெளியிலும் பரவிற்று. எனினும் காமன் எரிந்ததைக் ககனமும் புவனமும் வானும் நேரில் காணவில்லை. குணதிசையில் காவலாய் நின்ற நந்தியம் பெருமான் அப்புகையினைக் கண்டு மதனன் மடிந்து விட்டான் எனத் தீர்மானித்தார். அவர் அதனை மற்றவர்க்கு ஓதினர். இவ்வாறு கந்தபுராணத்துக் காமதகனப் படலம் விவரிக்கிறது. ஆனல் இங்குக் ‘ ககனமும் புவனமும் காண ’ என்றதன் பொருள்தான் என்ன?

செயற்கரிய செயலை - யாரும் செய்ய வியலாத செயலை ஒருவர் செய்யும் பொழுது அனைத்துலகும் அச்செயலைப் பற்றியே-சுற்றியே பார்வையினைச் செலுத்துகிறது. சந்திரனில் மனிதன் காலடிவைத்த பொழுது உலகின் எல்லாப் பகுதியில் வாழும் மக்களின் கவனமும் அந்த நிகழ்ச்சியினைச் சுற்றியே இருந்தது. மதியில் ''மனிதன் காலடி வைப்பதை உலகம் கண்டது'' என்று அதனைக் குறிப்பிடு கிறோம். அதுபோல் யாவரும் செயற்கரிய காமதகனம் என்னும் நிகழ்ச்சியை எல்லா உலகங்களும் வியப்புடன் கண்டது. அக்கருத் திலேயே 'காண' என்றார்.

(4) வில் விசயன், வில் இராமன், வில் காமன் என்று இம் மூவரும் வில்லால் புகழ் பெற்றவர்கள். மற்ற இருவரையும் விட வில் காமன் ஆற்றல் பெரிது. அவர்களையும் தனது வில்லுக்கு இலக் காக்கியவன். ஆனால் அவனது திறமை இறைவனிடம் பலிக்க வில்லை. காமன் கையாண்ட வில்லின் திறமையினையே கடிந்தான் கண்ணுதலான். ''வில்லான் வில் வட்டங் காய்ந்தான்'' என்று புகழுவார் அப்பர் பெருமான். எனவே காமனின் சிறப்பை ஆயுத மாகிய வில்லுடன் இணைத்து 'வில் காமன்' என்றார்.

(5) இறைவன் காமன் என்னும் ஒருவனை-அவனது ஆற்றலை அழிக்கவில்லை. அவனது அங்கத்தையே - உடலையே எரித்தார். அவனது அங்கத்தை உடலை தகனம் செய்த இடமே அங்கநாடு என வழங்கப்பட்டதென விசுவாமித்திரர் இராமருக்குச் சுட்டிக் காட்டுவதாகக் கம்பராமாயணம் கூறும். காமனுக்கும் இறைவ னிடம் பகை இருந்ததில்லை. இறைவனுக்கும் அவனிடம்வேண்டுதல் வேண்டாமை இருந்ததில்லை. பிரிந்திருந்த உலகநாயக நாயகி யைச் சேர்த்துவைக்கும் பணியில் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டான் காமன். எனவே, தங்களை இணைந்துவைக்கும் பணிக் காகத்தன்னையே 'ஆத்மநிவேதனம்' செய்துகொண்டமன்மதனுக்கு அருள் புரிய விரும்பிய அம்பிகையின் விருப்பப்படி அவனை அநங்க னாக இருந்து தொடர்ந்து அனைவரையும் ஆட்டிப்படைக்கும் ஆற்றலை அருளினன். ஆகவே 'அங்கம்' தகனம் செய்ததாகக் குறிப்பிட்டார். சிறப்பு மிக்க இந்நிகழ்ச்சியே காமதகனம் அல்லது காமன் தீப்பண்டிகை என்று கொண்டாடப் படுகிறது. (காமண்டிப் பண்டிகை என்பர் பாமரர்.)

(6) தவயோகிகளுக்கெல்லாம் தலைவனாகிய இறைவன் நால் வருக்கு நல்லுபதேசம் செய்தநிலையில் தட்சிணாமூர்த்தியாக இருந்த பொழுது மன்மதன் அவன்பால்சென்று கணைவிடுத்தான். அந்நிலை இருந்த பெருமானைத் 'தவப்பெருமான்' என்று புகழ்ந்தார்.

ஆதிகாலத்தில் நிகழ்ந்தது என்பதையும், பார்வதி பரிணயத்துக்குமுன் நிகழ்ந்தது என்பதையும் குமாரசம்பவமென்னும் முருகன் தோற்றத்துக்கு முன் நிகழ்ந்தது என பதையும் உணர்ந்த ''தகனம் முன்செய்த தவப்பெருமான்'' என்ருர். முன்நிகழ்ந்த இதனை அறிந்தும் தனது அன்பு காரணமாக இறைவனிடம் அச்சமின்றி இணைந்தாள் அம்பிகை. பின் வல்லபம் நிகழ்த்தினள். அதனை அடுத்த பகுதியில் குறிப்பிடுவார்.

ஆ. தவப்பெருமாற்குத் தடக்கையும் செம்முகனும்
முந்நான்கு இருமூன்று எனத் தோன்றிய
மூதறிவின் மகனும் உண்டாயதன்றே வல்லி
நீ செய்த வல்லபமே.

(1) மேற்கண்டவாறு காமதகனம் செய்த தவயோக மூர்த்தியைப்போகமூர்த்தியாக்கி அவருக்குப்பெரியதிருக்கைகளும்சிவந்த முகங்களும் முறையே பன்னிரண்டாகவும் ஆருகவும் பெற்ற திருக்கோலத்துடன் தோன்றிய முருகனுகிய பேரறிவுடைய மகனையும் உண்டாகும்படிசெய்தது கொடிபோன்ற நினது திறமையே ஆகும்.

(2) இப்பாடலின் முதற்பகுதியில் காமதகன வரலாற்றையும் பிற்பகுதியில் குமார சம்பவ வரலாற்றையும் சுருக்கமாக விளக்குகிருர். இறைவனின் நெற்றிக் கண்களிலிருந்து தோன்றிய ஆறு பொறிகளே பின்னர் சரவணம் புகுந்து திருமுருகனுக ஆயின வென்றும், முருகன் தோற்றத்தில் அம்பிகையின் சேர்க்கையே இல்லை யென்றும், பொதுவாக உலகில் பேசப்படுகிறது. அதனுல் முருகன் ஒருவனே 'ஆண்பிள்ளை' என்றும் புகழ்ந்து பேசுகின்றனர். ஆனுல் அபிராமிபட்டரோ முருகன் உண்டாயது அவள் வல்லபம் என்கிருர். ஏன் இந்த முரண்பாடு? முருகன் தோற்றம் பற்றியமுழுவிரங்களையும் ஆராயும்பொழுது இது முரண்பாடு அல்ல என்பது தெளிவாகும்.

(3) இறைவனின் நெற்றிக் கண்களிலிருந்து தோன்றிய பொறிகளைக்கண்டு அனைவரும் ஓடித்திரிந்து மீண்டும் இறைவனிடமே வந்தனர். அவர்களை 'அஞ்சேல்' என அச்சம் தவிர்த்து அப்பொறிகளைத் தாங்கிச் சென்று கங்கையில் விடும்படி அக்கினிக்கும் வாயுவுக்கும் கட்டளையிட்டான் இறைவன். அப்போது அப்பொறிகளைத் தாங்கித் செல்லும் ஆற்றல் எமக்கில்லை என்றனர் வாயும் அக்கினியும். அவர்கள் அப்பொறிகளைத்தாங்கிச் செல்லும் ஆற்றலை அளித்தது அல்லது ஆற்றலாகவே இருந்தது அம்பிகை தான். முருகன் தோற்றத்தின்பொழுது அக்கினிக்கும் வாயுவுக்கும் சக்தியளித்த கோலத்திலேயே அவளுக்கு 'ஜாதவேதோதுர்க்கை' என்ற பெயர் ஏற்பட்டது. இதனை 'மகிடன் தலைமேல் அந்தரி'

என்ற இடத்தில் கண்டோம். அவ்விதத்தில் அவளது வல்லபம் முன் நிற்கிறது.

(4) ஆறு சேய்களாகிய சரவணத்தில் வளர்ந்து கொண்டிருந்தவர்களைக் காண இறைவன் அம்பிகையுடன் வந்தான் " இந்த நின் மகனைக் கொடு வருக " என்றான் இறைவன்.

அம்பிகை ஆவலுடனும் அன்புடனும் எடுத்துத் தழுவிய பொழுது ஆறு குழந்தைகளே பின் ஒன்றாகி, பன்னிரு கரமும் ஆறு முகமும் உடைய கந்தனாகிவிட்டனர். இங்குதான் குமார சம்பவம் என்னும் முருகன் உதித்த நிகழ்ச்சி நிறைவுபெறுகிறது.

(5) ஆறினை ஒன்றாக்கிக் கந்தனை உண்டாக்கிய பெருமையினைத் தொடர்ந்து தனது திருமுலைப்பாலையும் அளித்து அவனை முதறிவின் மகனாகவும் ஆக்கிவிட்டாள் அம்பிகை. அவ்விதத்திலும் முதறிவின் மகனையுண்டாக்கியது அவள் வல்லபமாகிவிட்டது.

(6) " திகழ்தசக்கரச் செம்முகம் ஐந்துளான் " என்று கந்த புராணக் காப்புச் செய்யுளிலேயே இறைவன் பத்துக் கரங்களும் ஐந்து முகங்களும் உடையவன் என்கிறார். அவனுக்கு தேவியின் வல்லபத்தால் தோன்றியவன் முந்நான்கு இருமூன்றுஎன ' பன்னிரு கரமும் ஆறுமுகமும் உடையவனாக உருவானான் ஆறுமுகம் ஆன பொருளாக அருணகிரியார் குறிப்பிடும் பாடல் முதலிய பல அவன் அவ்வாறு திருக்கோலம் கொண்டதன் பெருமையினைப் பலவாறு பேசும்.

(7) தந்தையினும் சிறந்த மகனை ஈன்று தருதலே தாய்க்குச் சிறப்பு. அவ்வகையில் முருகனே சுவாமிநாதனாகி சிறுவயதிலேயே தந்தைக்கு உபதேசிக்கும் பரமகுருவானான். அச்சிறு வயதிலேயே 'பிரணவ உபதேசம்' செய்யும் அளவிற்கு முதிர்ந்த பேரறிவு பெற்றிருந்தான். எனவே முதறிவின் மகன் என்றார். அறிவின் முதிர்ச்சியையும் நிறைவையும் உணர்த்தவே 'முதறிவு' என்கிறார்.

(8) மாணிக்கவல்லி முதலான நவசக்திகளிடம் உருவான வீரபாகு முதலான நவவீரர்களும் சேர்ந்து ஒருலட்சத்து ஒன்பது துணைவர்களின் தோற்றமும் குமார சம்பவத்தின் ஒருபகுதியே ஆகும். அவ்வரலாற்றினையும் இப்பாடலில் வரும் 'வல்லி' என்ற சொல் குறிப்பாய் உணர்த்துகிறது. ஏனெனில், சக்தி அம்சமான ஒன்பதுபேரும் மரகதவல்லி, பவளவல்லி என்பனபோன்ற பெயருடையவர்கள்தாம்.

(9) திறமைமிக்க செயல்களை - வல்லபத்தைச் செய்தவள் எப்படிப்பட்டவள் தெரியுமா? மெல்லிய கொடிபோன்றவள்தான் என்ற நயம் தோன்ற " வல்லிநீ செய்த வல்லபம் " என்றார்.

(10) " நங்கடம்பனை பெற்றவள் பங்கினன் " என அப்பரும் ஆறுமுகனை அவள்பெற்ற மகனாகப் புகழக்காண்கிறோம். நன்மக்கட்பேறு எய்துதல் இப்பாடலின் பாராயணபலன் ஆகும். (தொடரும்)

ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகளின்

திருவருட்பாத் திரட்டு

(பொழிப்புரையுடன்)

வித்துவான் திருமதி. ப. நீலா, எம். ஏ., எம். ஃபில்.,

(மலர் 44, இதழ் 11, பக்கம் 815 இன் தொடர்ச்சி)

10. ஸ்ரீகாசி கதிர்காமவேலர் திருவருட்பா

உலகடங் கலுமருண வெயிலுமிழு முயரிரவி
 யொரு கோடி நிகர்மேனியும்
உமைமுலைப்பா லொழுகு கடைவாயு மிளநகையும்
 உச்சியுந் திகழ் கொண்டையுந்
திலகமுஞ் சுட்டியுந் திருநீறு மழகுபொழி
 திருநுதலு மருண் மாரிசேர்
திருநயனமுங் கருணைவதனமும் அம்மைதரு
 திருமுலைப் பாற் கிண்ணமும்
இலகுசெங் கைம்மலரு மஞ்சலெனு மொருகரமும்
 இருசெவியு முபய ரவியாம்
இருகுண் டலங்களும் பாத தாமரைகளும்
 இலங்குங் குழந்தை வடிவாய்க்
கலகலென வேசிலம் படியனேன் காணநீ
 காசிதனி லோடி வருவாய்
கங்கையுமை பாலனே கதிர்காம வேலனே
 கந்த சாமிக் கடவுளே. (1)

(பொ-ரை) கங்கைக்கும் உமைக்கும் மைந்தனே! கதிர்காம வேலவனே! கந்தசாமிக்கடவுளே! உலகம்முழுமையுமாக வெயிலைத் தருகின்ற சிவந்த உயர்ந்த சூரியர் ஒருகோடி நிகர்த்த மேனியும், உமையின் முலைப்பாலொழுகு கடைவாயும், இளஞ்சிரிப்பும், உச்சியில் திகழ் கொண்டையும், திலகம், சுட்டி, திருநீறு பொலிகின்ற நெற்றியும், அருள்மழை சேர்ந்த கண்களும், கருணைமுகமும், அம்மை தந்த திருமுலைப்பால் நிறை கிண்ணம் விளங்கும் செங்கை மலரும், அஞ்சலெனுங் கரமும், இருகாதுகளும், அதிலொளிவிடும்

இரண்டான சூரியர்களெனத் தகும் குண்டலங்களும், திருவடியாம் தாமரைகளும் - அதன் மேல் கலகலலெனச் சிலம்பும் சிலம்புடன் குழந்தை வடிவாய் அடியேன் காண காசிதனில் ஓடிவந்திடுக.

(கு-ரை) கேசாதிபாதமாக ஏறக்குறைய வருணனை அமைகிறது. முருகனை - திருஞானசம்பந்தராக்கி - கடைவாயிலொழுகு பால் செங்கைக் கிண்ணம் - இவற்ருேடு வருணித்தது முருகனே ஞானசம்பந்தராக வந்தவதரித்தார் - என்பதைக் குறிக்கப்போலும். 'எதிரிலாத பத்தி' - என்ற திருப்புகழில் ' வழுதிகூன் நிமிர்த்த பெருமாளே' - என்றருளுகிருர் அருணகிரியார். அம்மைதரு திருமுலைப்பால்,

" திருவரு ளமுதுகு ழைத்துவி டுத்தமு லைப்பாலாற்
கழுமல மதலைவ யிற்றை நிரப்பி மயிற் சேயைக்
களிநெடும் வளர வளர்த்தவள்' - (செல்வ - பிள்ளை. சப்-10)

குழந்தை வடிவாய் வருவாய் - குழந்தையாக வந்தால்தான் உன் திருமேனியின் ஒப்பற்ற அழகை என்னல் காணவியலும். ஸ்ரீ குமரகுருபரரும் ஸ்ரீ செல்வமுத்துக்குமரனின் (புள்ளிருக்கு வேளூரில் இருப்பவர்) அழகை - செம்பொனடிச் சிறுகிண்கிணி முதலாக உச்சிக் கதிர் முத்தீருக வருணித்து - செங்கீரையாடச் சொல்கிருர். (செல்வ. பிள்ளை - பா - 16)

தற்பரஞ் சோதியே பூரணப் பிரமமே
சதுர்முகப் பிரமாதியோர்
சதுமறையு மடிமுடிகள் காணமலே தேடு
சச்சி தானந்த சிவமே
அற்பு தானந்த வருளமுத மழைமேகமே
அனந்த கல்யாண குணமாம்
அகண்ட பரவெளியே யென்னுயிரினுக் குயிரே
அருட்கருணை மேருகிரியே
சிற்பரந்தந்த சிந்தாமணிக் குவியலே
செந்தே னெடுஞ்சலதியே
தெள்ளமுதமே ஜென்ம மாற்றுதற் கடியார்கள்
தேடவரு மருமருந்தே
கற்பகச் சோலையே யென்றடியனே னுனைக்
கவிமாரி சொரிய வருள்வாய்
கங்கையுமை பாலனே கதிர்காம வேலனே
கந்தசாமிக் கடவுளே. (2)

(பொ-ரை) தன்னொளியால் மேம்பட்டவனே! நிறைபிரம்மமே! நான்முகனும் திருமாலும் வேதங்கள் நான்கும் திருமுடி திருவடிகளைக் காணாமல் தேடும்படிநின்ற சச்சிதானந்த சிவனே! உலகில் காணமுடியாத ஆனந்த அருளமுத மழைபொழிமேகமே! எண்ணற்ற மங்கல குணமுடைய அகன்ற உயர்ந்த வெளியானவனே! என்னுயிர்க் குயிரானவனே! அருட்கருணையுடைமேருவே! மேலாம் அறிவுதந்த சிந்தாமணிக் குவியலே! செந்தேன் கடலே! தெளிந்த அமுதமே! பிறவியை மாற்றுதற்கு அடியார்கள் தேடி வரும் அருமருந்தே! கற்பகச்சோலையே என்று அடியேன் உனைக் கவிமாரி சொரிந்திடும்படி அருள்செய்வாய்.

(கு-ரை) தற்பரஞ் சோதி-சுயமான மேலான ஒளிவடிவினன். அமுதமழை பொழிமேகம் இல்லையாதலால்இது அற்புதம் என்றார். மழைமேகம், கருணைமேரு, தேன் சலதி-உருவகங்கள். சிந்தாமணி-நினைத்ததைத் தரும் மணி, அளவிலாற்றலுடையவனைக் குறிக்க மணிக்குவியலைக்கூறியதும்ஓரழகே! முன்னேவந்த (1-2)பாடலிலும் இதையே கூறினர். கற்பகச்சோலை-என்றதும் அப்பொருளிலேயே வந்தது.

சகலபுவனம் பணி சதாசிவற் கோர்குடிலை
தான்மொழிந் தருள் குருக்கள்
சதுமுகப் பிரமாவை முடியினிற் குட்டியே
தாள் சிறையிடுங் குருக்கள்
அகில சகதண்ட கோடிகளெலாம் பின்படைத்
தருள் தந்திடுங் குருக்கள்
அகத்திய மகாமுனிக் கருள்செய்து சடைமுடியி
லடிவைத்திடுங் குருக்கள்
பகரு முப்பத்து முக்கோடி வானவர் மகுட
பந்தி பணியுங் குருக்கள்
பதினெண் புராணமும் முனிவர் பணிசெய்யப்
பகர்ந்திடு குருக்க ளினிநான்
ககனமாருத மென்ன அத்துவித மாகக்
கலந்திடச் செய்த லரிதோ
கங்கையுமை பாலனே கதிர்காம வேலனே
கந்தசாமிக் கடவுளே. (3)

(பொ-ரை) கங்கை உமையின்மைந்தனும் கதிர்காமவேலனே! எல்லா உலகங்களும் தொழுகின்ற சதாசிவனுக்கு ஒப்பற்ற சுத்த மாயை (பிரவண மந்திரத்தை) தனை மொழிந்திடு தலைவன். நான்முகப் பிரமனை முடியில் குட்டி அவன் தாளில் விலங்கிட்டுச் சிறையிலிடுபவன். எல்லா உலக வுயிர்களையும் அதன்பின் தானே படைத்து அருள்தந்திடுபவன். பெருமைமிகு அகத்தியமுனிவருக்கு அருள் செய்து அவர்முடியில் திருவடிவைத்து தீட்சை அருளியவன். சொல்லப்படும் முப்பத்து முக்கோடி வானவர்களின் கிரீடவரிசைகள் திருவடிகள் பணியத் தலைவனுயிருப்போன். பதினெண்புராணமும் வல்ல முனிவர்களையும் பணிசெயுமாறு பகரவல்ல தலைவன். இனி என்னை விண்ணில் கலந்த காற்றென்ன அத்துவிதமாக உன்னுடன் கலந்திடச் செய்வது அரிதோ!

(கு-ரை) குடிலை - சுத்தமாயை. நால்வகை வாக்குக்கும் இது காரணமாய் இருப்பதால் - பிரணவ உபதேசம் எனக் கூற இடமுண்டு.

'பங்கேருகன் எனைப் பட்டோலையில் இடப் பண்டுதனை
தன்காலில் இட்டது அறிந்திலனோ! ...' கந். அல. 89.

தாள்சிறையிட்டது - விலங்கிடுவோர் பாதத்தில் விலங்கினைப் பூட்டிடுவர். இங்கே பிரமனின் காலில் விலங்குபூட்டியமை - நமக்குத் தெரியாது. அவனது - தாள் - முயற்சியைச் (தொழிலை) சிறைப் படுத்தினன் முருகன் என்று கொள்ளலாம் - பின்வரியில் அதனுல் தான் - அவனதுதொழிலைத்தானேஏற்றுச் செய்தான்எனக் கூறினர் தாள் - முயற்சி. 'தாளாற்றித் தந்த பொருள்' - குறள். 222

'தண்ணெண் அம்புயத் தவிசினேன் சிறைபுகத் தானே
எண்ணிலா வுயிர்த் தொகை யளித்தறுமுக விருந்தான்'

(கந்த. அயனைசிறைபுரி - 19)

அத்துவிதம் - இரண்டறக் கலத்தல். இதற்கு விண்ணுடன் காற்று கலத்தல் உவமையாயிற்று. தடையின்றி நீக்கமறக் கலக்கும் பொருத்தம் - மிகப்பொருத்தம். 'காற்றுகி எங்கும் கலந்தாய் போற்றி' (திருநாவு - கயிலைப்பதிகம்) விண்ணில் விகற்பமற மேவியகால் நின்றது போல், 'நண்ணும் பரையதனில் நண்ணியே'- என (துகளறு - 46) வரும். 3 ஆவது வரியில் 'வல்ல' தென்பது அவாய்நிலையான் வந்தது.

(தொடரும்

S. Ramalingam Bluffton Indiana 46714
18—8—85

அமெரிக்காவில் - - திருக்கோயில்கள் *

ஓம் சிவசக்தி

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுக்கு, இராமலிங்கம் திருவடி பணிந்து எழுதிக்கொண்டது.

நான் நியூயார்க் வந்து சேர்ந்த அன்று, எனது பையனும் குடும்பத்தினரும் நியூயார்க் வந்தார்கள். அங்கு ஒருநாள் தங்கி மறுநாள் அங்குள்ள விநாயகர் ஆலயத்துக்குச் சென்றுவந்தோம். அந்த ஆலயத்தில் சிவன், அம்மன், முருகன், வெங்கடாசலபதி விக்கிரகங்களும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. அங்கு ஸ்ரீ நடராஜர், சிவகாமி அம்மன், மாணிக்கவாசகர் வெண்கல விக்கிர கங்களும் உள்ளன. அவைகள், இங்கு அனுப்பப்படுவதற்கு முன்பு சிதம்பரம் நடராஜர் ஆலயத்தின் ஆயிரங்கால் மண்டபத்தில் வைத்து, அபிஷேகம் நடந்தபோது, நான் அதைக் கண்டுகளிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. ஆலயத்தின் அடித்தளத்தில்உள்ள கூடத்தில் பத்மினி அவர்கள் ஒரு நாட்டியப்பள்ளி நடத்தி வருகிறுர்கள்.

அங்கிருந்து மறுநாள் Pennsylvania State ல் உள்ள Pitts burgh சென்ருேம். அங்கிருந்து 50 மைலில்உள்ள Penn Hill என்ற இடத்தில் உள்ள ஸ்ரீ வெங்கடேசுவரர் ஆலயத்துக்குச் சென்ருேம். அந்த ஆலயம் ஒரு குன்றின்மீது கட்டப்பட்டுள்ளது. நாங்கள் சென்றபோது சில பக்தர்கள், ஸ்ரீ வெங்கடேசுவரருக்கும் தாயார் தேவிக்கும் கல்யாண உற்சவம் செய்துகொண்டிருந்தார்கள். நாங்கள் அர்ச்சனை செய்து வழிபட்டோம். இங்குள்ள இந்துக்களில் சிலர் தங்கள் குழந்தைகளுக்கு முதல் தடவை முடி எடுப்பதற்கும், நாமகரணம், அன்னப்ராசனம், ஆயுசுஹோமம் செய்வதற்கும் இங்கு வருகிருர்கள். பொதுவாக வைஷ்ணவ ஆலயங்களில் சைவ தெய்வங்களை வைத்து வழிபடுவதில்லை. ஆனல் இங்குள்ள ஸ்ரீ வெங்கடேசுவரர் ஆலயத்தில் விநாயகர் விக்கிரகம் பிரதிட்டை

---

* ஒரு கடிதம் கட்டுரையாக மலர்கிறது.

செய்யப்பட்டு, பூஜைகள் நடைபெற்று வருகிறது. இங்குள்ள சூழ்நிலையில் சிவாலயம், வைஷ்ணவ ஆலயம் என்று தனித்தனியே பிரித்து ஏற்படுத்திக்கொண்டிருக்க முடியாது.

அந்த ஆலயத்தில் மாயூரம் பக்கத்திலுள்ள குற்றாலத்திலிருந்து வந்த திரு. வரதராஜ அய்யங்கார் என்பவர் அர்ச்சகராக உள்ளார். அங்கு அளிக்கப்பட்ட பிரசாதங்கள் சுத்தமாகவும் — நன்றாகவும்இருந்தன. லட்டு,புளியோதரை, தயிர்அன்னம் எல்லாம் ஒவ்வொன்றும் ½ டாலர், ஆதலால் 1 டாலரில் மதிய உணவை முடித்துக் கொள்ளலாம். அன்று மாலை புறப்பட்டு இரவு Bluffton வந்து சேர்ந்தோம். (நியூயார்க்கில் இருந்து Bluffton 700 மைல்).

இங்கிருந்து சுமார் 100 மைலில் உள்ளDayton (Ohio State) என்ற ஊரில் கட்டப்பட்டு வரும் ஆலயத்தில் இராதாகிருஷ்ணன், இராமர் விக்கிரகங்கள் பிரதிஷ்டைசெய்யப்பட்டு, சென்றமாதம் 25 ஆம்தேதி கும்பாபிஷேகம்நடந்தது. இதற்குமுன் ஸ்ரீ கணேசர், ஸ்ரீ வெங்கடேசுவரர் விக்கிரகங்களும் பிரதிஷ்டை செய்யப்பட்டுக் கும்பாபிஷேகம் நடந்தது. ஆனால் எங்களால் அதற்குப் போக முடியவில்லை. நான் தனியாகவும் போக முடியாது. இங்கு பஸ் வசதியில்லை. இந்நாட்டில் கார் இருந்தால்தான் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்துக்குச் சென்றுவரமுடியும்.

இரண்டு வாரங்களுக்கு முன்பு இங்கிருந்து 350 மைலில் உள்ள (Mount Ville West Verginia/State) என்ற ஊரில்உள்ள 'இராதா கிருஷ்ண' ஆலயத்திற்குச்சென்றோம். 'ஹரேகிருஷ்ண' இயக்க பக்தர்களால் கட்டப்பட்டது. தற்போது விக்கிரகங்கள் ஒரு பெரிய (Temple of understanding) கூடத்தில் (ஹாலில்) வைக்கப் பட்டுள்ளன. அது ஒரு மலைப்பிரதேசம். அங்கு 5000 ஏக்கர் 'ஹரே கிருஷ்ண' இயக்கத்தினர் வாங்கியுள்ளனர். அந்த இயக்கத்தை ஆரம்பித்தவர் ஸ்ரீலஸ்ரீ பிரபுபாத சுவாமிகள். அவர்வசித்த இடம். அங்கு அவரின்நினைவாக Palace of Gold என்ற ஓர் நினைவாலயம் கட்டி உள்ளார்கள். அதைப்பார்க்கப் பக்தர்கள்-இந்துக்கள் மட்டு மல்லாமல், நிறைய அமெரிக்கர்களும் வந்து பார்த்துப் போகிறார் கள். அது ஒரு Tourist Centre ஆக மாறி வளர்ந்து வருகிறது. அந்த நினைவாலயத்தைப் பற்றி எழுத்தில் வர்ணிக்க முடியாது. அப்படி அதிக வேலைப்பாடுகளுடன் கட்டப்பட்டுள்ளது. அந்த ஆலயத்தில் முக்கிய விமானம் 32 டன் எடை கொண்டது. தங்கத் தகடுகளால் மூடப்பட்டு உள்ளது. கட்டிடத்தின் உள்ளேயும் வேலை கள் எல்லாம் தங்க முலாம் பூசப்பட்டு, ஒவ்வொரு இடமும் தங்க மயமாகக் காட்சியளிக்கிறது. கட்டிடம் இத்தாலியிலிருந்து தருவிக்

கப்பட்ட பல வர்ண சலவைக் கற்களால், நமது நாட்டில் உள்ள தாஜ்மஹாலுக்கு இணையாக அதே வேலைப்பாட்டுடன் கட்டப்பட்டு உள்ளது.

சுற்றுத் தாழ்வாரங்களில் உள்ள ஜன்னல்களில் கண்ணாடி வேலைப்பாடுகள் - பல வர்ணங்களில் - சித்திர அமைப்புகளாக, மிகச் சிறந்ததாய் அமைத்துள்ளார்கள். அங்குள்ள தொங்கும் கொத்து விளக்குகள் ஐரோப்பிய நாட்டிலிருந்து வரவழைக்கப் பட்டவை. அங்கு ஸ்ரீலஸ்ரீ பிரபுபாத சுவாமிகளின் உருவச்சிலையை, உட்கார்ந்து அவர் எழுதும் நிலையில் அமைத்துள்ளார்கள். அது சிலையாகத் தெரியவில்லை. சுவாமிகள் உயிருடன் உட்கார்ந்து எழுதிக்கொண்டிருப்பது போல் உள்ளது. அந்த ஆலயத்தில்உள்ள ஒவ்வொரு பகுதியும், ஒவ்வொரு அறையும், இப்படிச் சிறப்பான வேலைப்பாடுடன் அமைக்கப்பட்டுள்ளது. இத்தனை கட்டிடவேலை - தங்கவேலை, கண்ணாடிவேலை எல்லாம் 'ஹரேகிருஷ்ண' இயக்கத்தின் அங்கு வசிக்கும் தொண்டர்களால் - தாசர்களால் - செய்யப் பட்டவைகள் அந்த ஆலயத்தைச் சுற்றி அமைக்கப்பட்ட பூந்தோட்டம் - பிருந்தாவனம் - மிகமிக அழகாக உள்ளது. அந்த State இன் (நமது நாட்டின் மாநிலங்கள் என்றவைபோல்) உள்ள பூந்தோட்டங்களில் இந்தத் தோட்டத்தை முதலாவதாகத் தேர்ந்தெடுத்துள்ளனர். கிருஷ்ணன் வசித்த பிருந்தாவன நினைவுவரச் செய்யும் அளவு அழகாக அமைத்துள்ளார்கள். இராதாகிருஷ்ணருக்கு மிகப்பெரிய ஆலயமாகக் கட்டத்திட்டமிட்டு, ஆரம்பநிலையில் உள்ளது. அங்கு அமைந்துள்ள குன்றுக்குஎதிரில் மற்றொருகுன்றில் இந்த ஆலயத்தைக் கட்டத் திட்டமிட்டுள்ளார்கள். இந்த இரு குன்றுக்களுக்குமிடையே அழகிய தோட்டங்கள், நீர்நிலைகள், இப்படிப் பல அமைக்கத்திட்டமிட்டுள்ளார்கள். இவைபூர்த்தியாகச் சுமார் 10 ஆண்டுகள் ஆகலாம். இந்த ஆலயமும் அதைச் சார்ந்த சில அமைப்புகளும் கட்டுவதற்கு சுமார் 50 மில்லியனிருந்து 60 மில்லியன் டாலர் ஆகலாம் என மதிப்பிட்டுள்ளார்கள். அந்த ஆலயத்தில் முதல் மண்டபத்தில் 32 வித ஒலிகள் எழுப்பும் 16 தூண்கள் அமைக்கத்திட்டமிடப்பட்டுள்ளது. சென்ற 500 ஆண்டுக்காலத்தில் கட்டப்பட்டுள்ள ஆலயங்களில் (நம்நாட்டில் கட்டப்பட்டுள்ள ஆலயங்களையும் சேர்த்து) எல்லாவற்றையும்விட மிகப்பெரிய ஆலயமாக இது இருக்கும் எனக் கூறுகிறார்கள். இவையாவும் பூர்த்தி பெற்றால், அவ்விடம் ஒரு சொர்க்கலோகமாகக் காட்சியளிக்கும். அமெரிக்காவில் பார்க்கவேண்டிய முக்கிய இடங்களில் இதுவும் ஒன்று.

அந்த ஆலயத்தைச் சேர்ந்த சிற்றுண்டிச்சாலையிலும் உணவுச் சாலையிலும் புலால் உணவு கிடையாது. அத்துடன் அங்குச்செய்யப் படும் உணவு வகைகளில், வெங்காயமும் சேர்க்கப்படுவதில்லை.

இந்த ஆலயத்தில் ஒருகோசாலை அமைக்கத்திட்டமிட்டு ஏற்பாடுகள் நடந்துவருகிறது. பால்பண்ணையுடன் பசுப்பாதுகாப்பு, பசுவதைத் தடுப்பு என்ற திட்டத்துடன் ஆரம்பிக்கப்படுகிறது. அதன் ஆரம்ப கட்டமாக அந்தப்பகுதியில்உள்ள விவசாயி ஒருவர், அவரிடமிருந்த பசுக்களில் ஒன்று, பால் உற்பத்தியில் குறைந்துப் போனதால் கசாப்பு கடைக்கு விற்றுவிடுவதாக எண்ணியிருந்தார். திரு. லக்காளி என்பவர், அதைக்கேள்வியுற்று, அந்தப்பசுவை விலைக்கு வாங்கி, இந்த கோசாலையில் கொண்டு வந்து சேர்த்துவிட்டார்.

நாங்கள் சென்ற அன்று இரவு, ஆலயத்தின் கூடத்தில் பரத நாட்டியம் நடைபெற்றது. அந்த 'ஹரேகிருஷ்ணு' குழுவினரைச் சேர்ந்த Jatala என்ற ஒரு அமெரிக்கப் பெண் சிறப்பாக ஆடினார். நாட்டியம் முடிந்தவுடன், நான் அந்தப் பெண்ணுடன் பேசினேன். சென்னை கலா க்ஷேத்திராவில் பயின்று இங்கு வந்த ஒரு பெண்ணிடம் தான் நாட்டியம் கற்றுக்கொண்டதாகத்தெரிவித்தார். மேலும் அடுத்த ஆண்டு நமது நாட்டுக்கு வரலாம் என்றுள்ளதாகத் தெரிவித்தார். முடிந்தால் சிதம்பரத்துக்கு வரவேண்டுமென அழைத்துள்ளேன்.

மறுநாள் காலை 4 மணிக்கு நடந்த வழிபாட்டில் நான் கலந்து கொண்டேன். பிறகு அர்ச்சனை செய்துகொண்டு ஊர்திரும்பினோம்.

இந்நாட்டிலுள்ள எல்லா ஆலயங்களும் Board of Trustees (தர்மகர்த்தா குழு) Executive Committee (செயற்குழு) உறுப்பினர்களால் நிர்வகிக்கப்படுகின்றன. மேலும் Cultural Committee (பண்பாட்டுக் குழு) திருப்பணிக் குழு, Medical Service Committee (மருத்துவ உதவிக் குழு) எனப் பலகுழுக்கள் அமைத்துச் சிறப்பாகப் பணி செய்து வருகிறார்கள். அநேகமாக எல்லா ஆலயங்களும் ஒவ்வொரு மாதமும் மாதாந்திர இதழ் அல்லது 3 மாதத்துக்கு ஒரு முறை இதழ்கள் வெளியிடுகின்றன. அவைகளில் சென்ற மாதங்களுக்கான வரவுசெலவுக்கணக்கு, நன்கொடை கொடுத்தவர்களின் பெயர்கள், நடந்த விழாக்கள் பற்றியும், வரும் மாதத்திற்கான முக்கிய தினங்கள் (பஞ்சாங்கம்) மற்ற செய்திகளும் வெளியிடப் படுகிறது பொதுவாக இந்த நாட்டில் கட்டப்பட்டுள்ள ஆலயங்கள் எல்லாம் அழகாக, சுத்தமாக அமைதி தரும் இடமாக இருக்கின்றன. இங்கு ஆலயங்களில் எல்லா விசேஷ நாட்களும் சிறப்பு பூஜைகள் நடைபெறுகின்றன. சிவாலயங்களில், அதன் விசேஷ தினங்களுக்கான பூஜையும், வைஷ்ணவ ஆலயங்களில் இப்படி எல்லா விசேஷ நாட்களுக்கான பூஜைகளும் ஒழுங்காக நடைபெறுகின்றன. முக்கியமான பண்டிகைகள் (விநாயகர் சதுர்த்தி, சரஸ்வதி பூஜை போல்) அலுவலக நாட்களில் (திங்கள்-வெள்ளி) வந்தால், அன்று சிறப்பு பூஜை நடைபெறுவதுடன், அந்த

வாரத்தையொட்டி வரும் ஞாயிற்றுக்கிழமையன்று அந்த விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். அலுவலக நாட்களில் அங்குள்ளவர்கள் (இந்துக்கள்) தனது அலுவல் காரணமாக ஆலயம் வந்து வழிபடமுடியாது. ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெறும் விழாவில் அங்குள்ள எல்லா இந்துக்களும், மாநில, மொழி வேறுபாடின்றி, கூடி வழிபடுகிறார்கள். ஆலயத்தில் அந்தப்பகுதியிலுள்ள இந்து சமயத்தினர் எல்லோரும்கூடிப் பழக வாய்ப்பு ஏற்படுகிறது.

ஆலயங்களில் தனிமண்டபங்கள் அமைக்கப் பெற்றுள்ளன. சிலஆலயங்களில் ஆலயத்தின் அடித்தளத்திலும், சிலஆலயங்களில் ஆலயத்தைச் சேர்ந்தாற்போலும் கூடங்கள் (Hall) அமைக்கப் பட்டுள்ளன. விசேட தினங்களில் சமயச் சொற்பொழிவுகள் நடைபெறுகின்றன. நமது நாட்டின் பல்வேறு வகை நாட்டியங்களும் நடைபெறுகின்றன.

இங்குள்ள இந்தியர்கள், நமது கலாசாரத்துக்கு மாறுபட்ட சூழ்நிலையில் வாழ்ந்து வருகிறார்கள். ஆதலால் அவர்கள் குழந்தைகள் அடுத்த சந்ததியினர்கள், நமது கலாசாரம், பண்பாடு பற்றி அறிய வாய்ப்பில்லை. (பள்ளிகளிலும் இந்நாட்டு அண்டை வீட்டுக்காரர்களின் குழந்தைகளுடன் நமது குழந்தைகள் பழகும் நேரம் அதிகம்) ஆதலால் இந்துக் குழந்தைகளுக்கு இந்த ஆலயங்கள் நமது கலாசாரத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளக்கூடிய இடமாக அமைந்துள்ளது.

இங்குள்ள ஆலயங்களில் நமது நாட்டின் மொழியிலான ஹிந்தி, தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு முதலிய மொழிகளை இளைஞர்கள் கற்றுக்கொள்ள வசதி ஏற்படுத்தியுள்ளார்கள். மேலும் பரதம், குச்சுப்புடி, கதக் போன்ற நம்நாட்டின் நாட்டியங்களும், சங்கீதமும் கற்றுக்கொள்ளச் சில ஆலயங்களில் வசதி ஏற்படுத்தப் பட்டுள்ளது. ஆக, இங்குள்ள ஆலயங்களை, நமது நாட்டின், கலை, கலாசாரம், பண்பாட்டை வளர்க்கும் இடமாகவும் பயன்படுத்துகிறார்கள். நியூயார்க்கில் உள்ள ஆலயத்தில் பள்ளி ஏற்படுத்தி, நவீனகல்வியுடன், ஓரளவு நமது சமய உணர்வு குழந்தைகளுக்கு ஏற்படுத்தக்கூடிய திட்டத்தையும் இணைத்து நடத்தி வருகிறார்கள். இளைஞர்களுக்குக் கோடைமுகாமும் நடத்துகிறார்கள். இளைஞர்களுக்குப் பலவிததிறமைகளுக்குப்போட்டிகள் நடத்தி ஊக்கப்படுத்திவருகிறார்கள். நமது நாட்டில் பண்டைக்காலத்தில் நமது ஆலயங்கள் இந்த முறையில் செயல்பட்டு வந்தன.

இப்போது நமது நாட்டில் சில ஆலயங்களில் பூஜைகளும், விழாக்களும் மட்டும் நடைபெற்று வருகின்றன. மற்ற அளவில்

ஆலயங்களுக்கும், மக்களுக்கும் நமது நாட்டில் எந்தவிதமான தொடர்பும் இல்லை. சில ஆலயங்களில் முறையாகப் பூஜைகள் கூட நடைபெறுவதில்லை. அந்த ஆலயங்களின் நிதிநிலைமை அப்படி மோசமான நிலையிலுள்ளது.

இங்கு இன்னும் சிலநகரங்களில் ஆலயத் திருப்பணி (புதிதாக) நடந்து வருகிறது. அத்திருப்பணிக்கு இங்குள்ள இந்துசமயத்தினர் நிறைய நிதி உதவி செய்கிறார்கள். அப்படிக் கொடுக்கப்படும் தொகைக்கு இந்நாட்டின் அரசு வரிவிலக்கு அளிக்கிறது. இந் நாட்டின் அரசு மதசார்பற்றது. இதுஒரு Secular State. அமெரிக்க அரசு மதசார்பற்ற கொள்கையை முழுமையாகக் கடைபிடிக்கிறது. எந்த மதமாயினும் அதன் விவகாரங்களில் தலையிடுவதில்லை. சிறுபான்மை மதத்தினர் என்பதற்காக அதற்கு ஒரு தனிச்சலுகை கிடையாது. அரசு பள்ளிகளில் காலைபிரார்த்தனை (Prayer) இருக்க வேண்டுமெனவும் ஒருசட்டதிருத்தம் கொண்டுவர வேண்டுமெனவும் ஓரிரு நாடாளுமன்ற உறுப்பினர்கள் விரும்பி முயற்சித்தனர். அந் நாட்டின் உயர்நீதிமன்றம் அந்நாட்டின் சட்டப்படி அதற்கு இடமில்லை எனத் தீர்ப்பளித்து விட்டது.

இந்தமுறை எனது அமெரிக்க பயணம். ஆலய யாத்திரையாக ஆயிற்று. ஆலயங்கள் சென்று தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தது. நான் கேட்டு அறிந்துகொண்டவை பற்றியும் ஆலயங்களைப் பற்றியும் ஓரளவு சுருக்கமாக இக்கடிதத்தில் எழுதியுள்ளேன்.

இங்கு நான் தினசரி, வாரஇதழ்களைப் படிக்கும்போது முக்கிய மாக, விவசாயம், மதம், கல்வி, சமூகமுறை இவைகளைப்பற்றி ஓரளவு தெரிந்துகொள்ள வேண்டுமென முயற்சி எடுத்துக்கொண் டேன். அவைகளில் முக்கியமாக மத சம்பந்தமான செய்திகள் கட்டுரைகள் இவைகளைப் படித்தபோது ஏற்பட்ட எனது எண்ண ஓட்டங்களைப் பற்றி நான் இதில் குறிப்பிடவில்லை. அதுபற்றி எழுதி னல் இக்கடிதம் இன்னும் சில பக்கங்கள் கூடும், நீண்ட கடிதமாக லாம்.

இன்று விநாயகசதுர்த்தி இந்த தினத்தில் தங்களுக்குக்கடிதம் எழுதும் வாய்ப்பு ஏற்பட்டதும் எனது பாக்கியம். அடுத்தவாரம் சிக்காகோவில் உள்ள ஆலயத்துக்குச் செல்வதாக உள்ளோம். சிக்காகோவில் 'ராமாலயம்' திருப்பணிவேலை நடந்துவருகிறது. அந்த ஆலயத்திலும் விநாயகர் பிரதிஷ்டை செய்துள்ளார்கள். தங்கள் அருளாசி வேண்டும்.

இப்படிக்கு,

ச. ராமலிங்கம் (சிதம்பரம்)

சிவனருட்செல்வர்,
வை. பக்கிரிசாமிச் செட்டியார்,
எம். ஏ., பி. எட்.,

திருத்துறைப்பூண்டி
17—10—85

அனைத்துலகும் தொழுதேத்தும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் பொற்பாதகமலங்கட்குத்தங்கள் மலரடிமறவா அடியவன் வை. பக்கிரிசாமி அனேக கோடி வணக்கங்களுடனும் மிகப்பணிந் தெழுதிக் கொண்டது. அனைவரும் உய்யும் வண்ணம் தாங்கள் வானொலியில் அளித்தருளிய உபதேசங்களை நான்கு நாட்களும் கேட்டுய்ந்தேன். முதல் நாள் அனைத்துலகும் அம்மையப்பன் அருள் வடிவாய் இலங்குவதையும் அடுத்தநாள் நடராச தத்துவத்தையும், மூன்றும் நாள் அருள்மிகு முருகப்பெருமான் பெருமையையும் அனைவரும் உய்யும் வண்ணம் உரையாற்றியருளி அருளுபதேசம் செய்ததைக் குடும்பத்துடன் அனைவரும் கேட்டுய்ந்தோம். எங்கள் தவத்தால் அருளுரை கேட்கும் பேறு கிடைத்தது. இப்பேற்றை எங்கட்கு அளித்தருளிய குருமகாசந்நிதானம் அவர்கள் திருவடி மலர்களை அதிகப்பணிவன்புடன் வணங்குகிறேன். தங்கள் மேலான அருளாட்சி சிறந்தோங்கவும், அடிக்கடி எங்கட்கு அருளுபதேசம் வானொலியில் தாங்கள் அளித்தருளியும் உய்விக்க அம்மையப்பன் இணையடிகளை இறைஞ்சுகிறேன்.

அன்பும் பணிவுமுள்ள
வை. பக்கிரிசாமி

★

மு. செகந்நாதன் பி. லிட்,

பேரூர் - கோவை - 10.
27—10—85

ஞானசம்பந்தம் மாத இதழ் வழிச் சைவசமயப் பயிற்சிப் பாடம் பயின்று வளர்கின்றேன். அவ்விதழ்களில் சந்நிதானங்களின் ஆசியுரையும் அருளுரையும் தொடர்ந்து படித்து திருநின்றவூர்ப் பூசலாராய்த் திருமேனியைக் கண்டு தொழுது இறும்பூதடைந்து பெருமிதங் கொண்டு பயனுறுகின்றேன்.

புரட்டாசித் திங்கள் வழி திருஞானசம்பந்தர் பெருமான் - தன் தாயின் பிறந்தகமான திருநனிபள்ளித்தல வழிபாட்டில் தன் தந்தை புயத்தமர்ந்து அருளிய பதிகத்தின் பண் பியந்தைக் காந்தாரம் ஆம் என்று அற்புத விளக்கவுரை அருளியும் திருக்கடைக் காப்புச் செய்யுளில் ''அத்தர் பியன்மேல் இருந்து இன்னிசையால் உரைத்த பனுவல்'' என்ற அகச்சான்று எடுத்துக்கூறி விளக்கியும் ''எந்தை நனிபள்ளி உள்க வினை கெடுதல் ஆணை நமதே'' என்று முதன்

முதலாக ஆணையிட்டுரைத்த பதிகம் இதுவே என்று ஆய்வுநோக்கில் அருளியும் ''நீநாளும் நன்னெஞ்சே '' என்ற பாடலின் பொருளுரையில் - புண்ணியப் பொருள்களை மார்புக்கு மேல் எடுத்துச் செல்லவேண்டும் என்று விளக்கியும் நெஞ்சறிவுறுத்தும் இப்பாடலை ஓதுவோர் பிழைபடப் பாடும் முறை திருத்திக்காட்டிய திருவுளப் பாங்கும் கண்டுணர்ந்து பேருவகைகொண்டேன். இதுபோன்று பல அருளுரைகளைப் படித்துத் தெளிவும் கொண்டுய்கின்றேன்.

திருஞானசம்பந்தப் பெருமானது நான்காம் தலயாத்திரைக் குறிப்புரை கண்டு விளக்கவுரை வரைவைக்காண விழைந்துநிற்கும் பேருவகையன்.

தங்கள் திருவருளை நாடும்

மு. செகந்நாதன்

ரெடிமேட் ஆடைகள் வாங்க
கைராசியான ஸ்டோர்ஸ்
ரெடிமேட் ஆடைகள் & பனியன்
ரகங்களுக்கு சிறந்த இடம்

நியூ மல்லிகா
ஸ்டோர்ஸ்

105, பட்டமங்கலத்தெரு,
மயிலாடுதுறை - 609 001.

அக்கராகாரம்

இதன் வேர் விரல் அளவிற்கு இருக்கும் - நிறம் - வெண்கருமை. இதை மென்று சுவைத்தால் நா, உதடு இவ்விடங்களில் விறுவிறுப்பையும் எரிச்சலையுமுண்டாக்கும். வாயில் நீர் ஊறும்.

சுவை : கார்ப்பு.

தன்மை : வெப்பம்.

குணம் : வாத தோடம் மற்றும் நீர்வேட்கை நீங்கும்.

வாயில் அடக்கினால் நாவரட்சி நீங்கி, நாக்கில் நீர் ஊறும், பல்வலி, உண்ணாக்கு வளர்ச்சி, தொண்டைக்கம்மல், நா அசைவற்றுப் போதல், கீல்வாயு இவைகளும் நீங்கும்.

அக்கராகாரம் அதன் பேர் உரைத்தக்கால்
உக்கிரகால் அத்தோடம் ஓடுங்காண் — முக்கியமாய்க்
கொண்டால் சலம் ஊறும் கொம்பனையே தாகசுரம்
கண்டால் பயந்தோடுங் காண்.

இதன் தனித் தூளை மூக்கிலிடக் காக்கை வலி நீங்கும்.

அக்கராகாரம், அதிமதுரம், சிற்றரத்தை, சுக்கு இவைகளைத் தனித்தனியாய்ப் பொடித்து ஓர் அளவாகக் கூட்டிப் பசுவின் பால் விட்டரைத்தெடுத்த விழுது ஒருபங்குடன் பாலில் வேகவிட்டெடுத்த பேரிச்சம் பழத்தை அரைத்த விழுது நான்குபங்கை ஒன்றுசேர்த்துப் போதுமான அளவு தேன் விட்டுக் குழைய அரைத்தெடுத்து நாவில் தடவினால் சுரம், நாவரட்சி நீங்கும்.

வாந்தியிருந்தால் மயிலிறகைச் சுட்ட சாம்பலும், மலபந்தம் இருந்தால் கடுக்காய்த் தோலையும், மலபோக்கிருந்தால் மாசிக்காயையும், நீர் கட்டியிருந்தால் வெங்காரத்தையும் சேர்க்க நலந்தரும்.

தொகுத்தளித்தவர் :- **திரு. P. புலியூர் உடையான்**

ஆதாரம் :- பொருட் பண்பு நூல் பயிர்வகுப்பு
குணபாடம் (மூலிகை வகுப்பு)

இயற்றியவர் :- வைத்திய இரத்தினம்,
திரு. க. ச. முருகேச முதலியார் அவர்கள்.

திருஞானசம்பந்தர்

வித்துவான். திரு. கா. ம. கண்ணப்பன் எம். ஏ., பி.எட்.

[தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் 6—10—1985 ஆங்கிலமாத முதல் ஞாயிறன்று வழங்கிய அருளுபதேசத்தை யொட்டி எழுதப்பெற்ற கட்டுரை.]

சுறுசுறுப்பாக எழுந்தேன் மணி 9-45க்குத் திருமடம் செல்லும் நினைவோடு! முதல் ஞாயிறு என்னும் அருளனுபவ நாளைச் சொற்களால் வருணித்திட இயலாது!

திருமடம் சென்றேன். மணி 10க்கு முன்னே! வழக்கம் போல் தூண்களில் அமைந்த சிற்பங்களை ரசிக்கிறேன். எத்தனை நகைச்சுவை யூட்டும் முனிவர்களின் சிற்பங்கள்! ஒவ்வொரு தூணிலும் ஒவ்வொரு கோலம்! ரசிக்கிறேன்.

பண்டாரக்கட்டில்...... இல்லை! இல்லை! அலுவலகத்தில் அன்று அருளுபதேசம்! கல்லூரி மாணவியரும் அன்பர்களும் குழுமியிருந்தனர். அன்பர்களின்எண்ணிக்கை மிகுதியானமையால் அன்று அங்கே நிகழ்ந்தது.

குருமணிகளிடம் திருநீறு பெற்று அமர்ந்தோம்; பாராயணம்; அடுத்துத் திருச்சியிலிருந்து வந்த குழந்தை ... யின் மழலைச் சொற்பொழிவு!

குருமணிகள் அருளுபதேசம் தொடங்கினர்கள்; திருஞானசம்பந்தரின் நான்காம் தலயாத்திரை அன்றைய சிந்தனை.

முதலில் அக்டோபர் மாதத்தின் சிறப்பை அருளிச் செய்தார்கள். நவராத்திரி விழாவும், ஸ்ரீ அருணந்தி சிவாசாரியர் குருபூஜையும் பற்றிக் குறிப்பு அருளி ஸ்ரீ அருணந்தி சிவாசாரியர் அருளிய சிவஞான சித்தியார் காப்புச் செய்யுளான 'ஒருகோட்டன் இருசெவியன்' என்று தொடங்கும் எண்ணலங்காரப் பாடலுக்குத் தொடர்விளக்கம் செய்தார்கள். 'செய்யும்தேவே' என்ற தொடரின் பொருளை இறைவன் வேறு; நாம்வேறு; என்னுது செய்யும் என

அத்வைத நிலைகாட்டிச் சித்தாந்த நெறிவிளக்கியது சிறப்பாக - சிகரமாக விளங்கிற்று! மேலும் 'ஓவாதே' என்பது இடைவிடாது என்னும் பொருளது எனச்சுட்டுப் பொருளைக் காட்டிலும் அருளைப் போற்றி வாழவேண்டும் எனக்குறித்தமை இனிய உபதேசமாக அமைந்தது.

அடுத்து சோமாஸ்கந்தர் என்றசொல்லை சக+உமா+ஸ்கந்தர் என்ற பிரிப்புடையது எனக் குறித்தார்கள். சக-உடன் இருப்பவர்; உமை, கந்தன் ஆசிரியர்களுடன் இருப்பவர் என்று அருளி உலகியலில் உன் சகா எங்கே? எனக் கேட்பதையும் சுட்டினார்கள். அடுத்துத் தியாகராஜர் வடிவம் 25 மகேசுரமூர்த்தங்களுக்கும் அப்பாற்பட்டது எனக்குறித்து 'ஐயஞ்சின் அப்புறத்தான்' என்பது இப்பொருளாகலாம் எனக் குறிப்பிட்டமை ஆய்வு நோக்கோடு அமைந்தது. துன்பநிலையில் உள்ளோர் சோமாஸ்கந்தரை வழிபட வேண்டும் என்றும் இறைவன் வேகவடிவம், போகவடிவம், யோகவடிவம் கொண்டவன்; இவற்றுள் வேக வடிவம் அட்ட வீரட்டத்தலங்களில் காணப்படுவது; போகவடிவம் சோமாஸ்கந்த வடிவம்; யோக வடிவம் தக்ஷிணாமூர்த்தி வடிவம் என்றும் விளக்கியமை தெளிவாக- விளக்கமாகஅமைந்தது. சோமாஸ்கந்தர் சச்சிதானந்த ரூபமானவர்; உண்மை, அறிவு ஆனந்தமே சச்சிதானந்தம் எனப் பொருள் புலப்படுத்திய பாங்கு உணர்ந்து இன்புறத்தக்கதாக அமைந்தது.

அடுத்துப் புராண வரலாற்றுச் சிந்தனையாகத் திருநீலகண்ட யாழ்ப்பாணரை 'ஐயரே!' என்றமை சுட்டிக் குலம் என்பது பண்புகளால் ஆகியது என்பதைப் பகவத் கீதை கொண்டு சுட்டினார்கள். யாழ்ப்பாணரைத் திருநீலநக்கர்யாகசாலைக்கு அழைத்துச்சென்றார்- திருஞானசம்பந்தரும் பாணரும் நட்புக் கொண்டனர்.

தில்லைப்பதியடைந்து ஸ்ரீ நடராசப் பெருமானைத் தரிசிக்க எண்ணினார் ஞானப்பிள்ளையார். சீகாழிப் பெருமானைத் தரிசித்துப் புறப்பட்டார். தில்லையடைந்தார்; தென்திசை வாயில் வழியே திருக்கோயிலுட் சென்றார்; " கற்றாங்கு எரியோம்பிக் கலியை வாராமே செற்றார் " எனத் தொடங்கிப் பதிகம் பாடினார். தில்லைவாழ் அந்தணரைச் சிறப்பித்துப் பாடிய பாடல் இது. தில்லைப்பெருமானை வணங்கித் திருவேட்களம் சென்று அங்கு எழுந்தருளிய பெருமானை வணங்கினார். அங்கிருந்து கொண்டே தில்லைப் பெருமானை வந்து தரிசித்தார். இப்பகுதி தற்போது அண்ணாமலை நகர் எனக்குறிக்கப்

படுகின்றது. ஞானசம்பந்தர் ‘ வேட்கள நன்னகரானே ’ என்றார். அருளாளரின் முற்குறிப்பாக இது அமைந்தது எனக்குறித்தார்கள். பதிகப்பாடல்களின் கருத்து விளக்கம் அருளினார்கள்.

சம்பந்தர் அங்கு நின்றும் புறப்பட்டுத் திருக்கழிப்பாலை, திருநெல்வாயில் என்ற தலங்களை வணங்கித் திருப்பதிகம் பாடினார். திருவேட்களத்தினின்று தில்லை வந்து கொண்டிருக்கும் போது திருநீறணிந்த தில்லைவாழ் அந்தணர்கள் சிவகணநாதராய்க் காட்சியளித்தனர். சம்பந்தர் யாழ்ப்பாணருக்கும் இக்காட்சி காட்டினார். பின்னர் சிதம்பரக் கூத்தரின் திருவடிபணிந்தார்; “ ஆடினாய் நறுநெய்யொடு பால் தயிர் ” என்று தொடங்கித் திருப்பதிகம் பாடினார். குருமணிகள் பாடல் விளக்கமாகச் சித்தாந்த நுட்பங்கள் பலவற்றை அருளினார்கள்.

தில்லைப்பதியை வணங்கிய பிள்ளையாரைநோக்கி யாழ்ப்பாணர் நிவாநதிக் கரையிலமைந்த தம்பதியாகிய திருவெருக்கத்தம் புலியூரை வழிபட எழுந்தருளுமாறு வேண்டினார். குருமணிகள் நிவா என்ற நதியின் பெயர் நீவா என்பதன் மரூஉ எனக்குறித்தார்கள். புலியூர்என்றபெயருடைய தலங்கள்5. பெரும்பற்றப்புலியூர் (தில்லை) எருக்கத்தம்புலியூர், பாதிரிப்புலியூர், ஓமாம்புலியூர் (கானாட்டு முள்ளூர்), பெரும்புலியூர் என்பன அவை எனக்குறித்து விளக்கம் அருளியமை சிறந்த தொகைக் குறிப்பாக அமைந்தது.

மேலும் ஞானசம்பந்தர் திருவெருக்கத்தம்புலியூரை அடையும் போது அதை அடையாளம் காட்டும் முகமாகப் பாணர் “ கார் நெருங்கு சோலை சூழ்பதி அடியனேன் பதி ” எனக்குறித்தார். குருமணிகள் சோலைகளின் பயன் கார் என்பதைக் குறித்துக்காட்டி காடுகள் மூன்றில் ஒன்று என்ற விகிதத்தில் இருக்கவேண்டும். தற்போது ஏழில் ஒன்று என்ற விகிதத்தில் உள்ளமையால் பல துன்பங்கள் நேர்கின்றன எனச் சுட்டினார்கள். மேலும் திருநனிப் பள்ளி பற்றிக் கூறும்போதும் சேக்கிழார் சோலையை அடையாளம் காட்டிக் கூறினார். அக்காலத்தில் சோலைகளின் நடுவில் தலங்கள் விளங்கின; ஆதலால் மழைவளம் சிறந்தது என்ற குறிப்பையும் அருளினார்கள்.

எருக்கு தலமரமாதலால் எருக்கத்தம்புலியூர் எனப்பட்டமையையும் அருளினார்கள். ஞானசம்பந்தர் ‘ படையார் திரிசூலம் ’ எனும் பதிகம்பாடிப் பரவினார். அடுத்துப்பாணரும் பிள்ளையாரும் ‘திருமுதுகுன்றம் அடைந்தோம்’ என்ற கருத்தொடு பதிகம் பாடித் திருமுதுகுன்றம் (விருத்தாசலம்) அடைந்து தொழுதனர். அங்குத் திருவிருக்குக்குறள் பாடினார். சம்பந்தர் அருளிய

"நின்று மலர்தூவி, இன்று முதுகுன்றை
நன்றும் ஏத்துவீர்க்கு என்றும் இன்பமே"

என்னும் பாடலுக்கு அற்புதமான விளக்கம் அருளி நின்று மலர் தூவி வழிபடுதல் குறிப்பாகத் தருமையாதீனத்தில் மரமாக இருத்தலைக் குறிப்பிட்டபோது சித்தாந்த மரபு ஆதீனத்தில் போற்றப்படுதலை எண்ணி எண்ணி அன்பர்கள் மனநிறைவு கொண்டனர்.

பிள்ளையார் "முரசு அதிர்ந்து எழுதரும்" என்று தொடங்கும் திருப்பதிகத்தையும் முதுகுன்றில் பாடித் தொழுதார். அங்கு நின்று போந்து பெண்ணாகடம் அடைந்து தூங்கானைமாடச் சுடர்க் கொழுந்தீசரைப் பணிந்தார். பெண்ணாகடம் என்பது பெண் + ஆ + கடம் என்னும் பிரிப்புடையது. அரம்பையர், காமதேனு, வெள்ளானை வழிபட்டது எனற குறிப்பை அருளினார்கள்.

பெண்ணாகடத்திலிருந்து திருவரத்துறைப்பெருமானை வணங்க எண்ணிப் புறப்பட்டுச்சென்றார். மாறன்பாடி என்ற தலம் அடையும்போது தம்முடன் வந்தோர் இளைப்படைதலைக் கண்டு திருவைந்தெழுத்து ஓதி அங்குத்தங்கினார். திருவரத்துரைப் பெருமான் ஞானசம்பந்தர் வருத்தத்தினை மாற்றத் திருவுளம் கொண்டார், அவர் ஏறிச்செல்ல முத்துச்சிவிகையும், பிடித்துக்கொள்ள முத்துக் குடையும், ஊதுவதற்கு முத்துச்சின்னமும் கொடுத்தருளினார். முத்துச் சிவிகை கிடைக்கப்பெற்ற இறையருளைவியந்து சிவிகையை வலம் வந்து வணங்கினார். 'எந்தையீசன்' என்ற பதிகம் பாடி நிறைவித்தார். உலகம் உய்ய அஞ்செழுத்து ஓதி அதன் மீது ஏறினார்.

குருமணிகள் சிவிகை, குடை, சின்னம் ஆகியவற்றின் தத்துவங்களை விளக்கினார்கள். ஆதீனத்தில் சிவிகைக்கு அளிக்கப் படும் உயர்வினைச் சுட்டினார்கள். புறநானூற்றில் "நின்குடை வெயில் மறைப்பதற்கு அன்று; வருந்திய குடிமக்களின் குறை நீக்கவே" என்னும் கருத்தமைத்த பாடலைச் சுட்டி முத்துக்குடை பற்றிய தத்துவ விளக்கம் அருளியமை இனிமையாக அமைந்தது.

இங்ஙனம் இனியமேற்கோள்களும் உலகியல் எடுத்துக்காட்டுக்களும் அமைந்த அருளுபதேசம் 12-10க்கெல்லாம் நிறைந்தது. அன்று பாயசம் தாகசாந்திக்கு விருந்தாயிற்று உண்டோம்; மகிழ்வு கொண்டோம். இல்லம் ஏகினோம்!

வாழ்க குருமணிகள்!

செய்திகள்

ஆயில்யத்திருநாள் வழிபாடு

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஜன்ம நக்ஷத்திரத் திருநாளாகிய ஆயில்யத் திருநாள் இம்மாதம் 6—11—85 புதன்கிழமை காலை தொண்டைநாட்டுத் தலங்களாகிய திருக்குரங்கணில் முட்டத்திலும் மாலைதிருமாகறலிலும் வழிபாடுகள் நிகழ்த்திக் கொண்டாடப் பெற்றது. விநாயகர், சுவாமி, அம்பாள், ஆகிய மூர்த்திகளுக்கு அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. தலத் திருப்பதிகங்கள் வெளியிடப்பெற்றன. அன்பர்கள் பலரும் கலந்து கொண்டு வழிபட்டு மகிழ்ந்தனர்.

குருமகாசந்நிதானத்தின் அருளுரை

ஒவ்வொருஆங்கிலமாதமும் முதல்ஞாயிறன்று நிகழும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் அருளுரை இம்மாதம் 3—11—85 அன்று நிகழ்ந்தது, திருஞானசம்பந்தர் புராண வரலாற்றை யொட்டிப் பல்வேறு சமயவழிபாட்டுத் தத்துவக் கருத்துக்களை ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்கள் அருளுபதேசமாக வழங்கினார்கள். பலரும் கலந்து கொண்டு கேட்டுப் பயன் பெற்றனர்.

அருணந்திதேவர் குருபூஜை விழா

சந்தானாசாரியர்களில் இரண்டாமவராகிய ஸ்ரீ அருணந்தி தேவநாயனார் குருபூஜை விழா 11—10—85 அன்று திருத்துறையூரிலும் தருமையாதீனத்திலும் சிறப்புறக் கொண்டாடப் பெற்றது. திருத்துறையூரில் ஸ்ரீ அருணந்திதேவநாயனார் குருமூர்த்தத்திலும் ஸ்ரீ சிஷ்டகுருநாதேசுரர் ஆலயத்திலும் அபிஷேக ஆராதனைகளும் மாகேசுவரபூஜையும் நிகழ்த்தப் பெற்றன. மாலை 5 மணிக்கு திருவதிகை சரு. வை. சண்முகசுந்தர தேசிகர் அவர்களும் திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்களும் அருணந்திதேவர் வரலாறு அவர் அருளிய நூல்கள் ஆகியனகுறித்துச் சொற்பொழிவாற்றினர். திருத்தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் சந்தானாசாரியர் நால்வர்க்கும் அபிஷேக ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. திரு. கா. ம. கண்ணப்பன் திரு, சொ. முத்தையாதேசிகர் ஆகியோர் சந்தானாசாரியர்கள், அவர்கள் அருளிய சைவ சமயதத்துவக்கொள்கைகள் ஆகியன குறித்து உரை நிகழ்த்தினர். ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி அனைவர்க்கும் அருட்பிரசாதம் வழங்கியருளினார்கள்.

நவராத்திரி விழாவும் 35-வது சதசண்டிவேள்விவிழாவும்

தருமையாதீனம் ஸ்ரீ மகாலக்ஷ்மி துர்க்காதேவி திருக்கோயிலில் 14—10—85 முதல் 23—10—85 வரை நவராத்திரி விழாவும் 35 வது ஆண்டு சதசண்டி வேள்வி விழாவும் சிறப்புற நடைபெற்றன. காலை மாலை இருவேளைகளிலும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி பூரணாகுதி தீபாராதனை தரிசனம் செய்தருளினார்கள். இரவுபூரணாகுதி தீபாராதனைக்குப்பின் பிர்மஸ்ரீ ஆர். வேங்கடேஸ்வர சர்மா எம். ஏ., பி. டி., அவர்கள் தேவி மகாத்மிய விரிவுரை நிகழ்த்தினார்கள் 22—10—85 அன்றுகாலை மகாபூர்ணாகுதியும 23—10—85 அன்று காலை யாக கலசாபிஷேகமும் நிகழ்ந்தன.

ஆதீனத் திருக்கோயில்களில் நவராத்திரி விழாவும் சொற்பொழிவுகளும்

தருமையாதீனத் திருக்கோயில்களில் நவராத்திரிவிழா சிறப்புற நடைபெற்றது. அம்பாளுக்கு விசேஷ அலங்கார ஆராதனைகளும் அர்ச்சனைகளும் நிகழ்த்தப் பெற்றன. சீகாழியில் - வித்துவான். திரு. சொ. முத்தையன் எம். ஏ., அவர்களும், திருக்கடவூரில் வித்துவான். திரு. கா. ம. கண்ணப்பன் எம். ஏ., அவர்களும், திருவையாற்றில் - வித்துவான் திரு. சுவர்ணகாளீசுவரன் அவர்களும், வேளூரில் - டாக்டர் திரு. மு. சிவச்சந்திரன் அவர்களும், திருபுவனத்தில் - வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ., அவர்களும், அம்பாள் பெருமைகளைப்பற்றிச் சொற்பொழிவுகள் ஆற்றினர்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி குருபூஜை விழா

தருமையாதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்தபரமாசாரிய சுவாமிகளின் 14 ஆவது ஆண்டுக்குருபூஜை விழா அவர்கள் குருமூர்த்தத்தில் விசேஷ அபிஷேக ஆராதனைகளுடன் சிறப்புறக் கொண்டாடப் பெற்றது. தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களுடன் காஞ்சிபுரம் தொண்டைமண்டல ஆதீனம் குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகளும் வழிபாட்டில் கலந்து கொண்டார்கள்.

காலை 9 மணி அளவில் ஆதீன அடியவர்களின் அருள்நூல்கள் பற்றிப் புலவர்கள் பலரும் விரிவுரைகள் நிகழ்த்தினர். டாக்டர் திரு மு. சிவச்சந்திரன் - குமரகுருபர முனிவர். டாக்டர் திரு. ஏ. வி. ஜயச்சந்திரன் - வெள்ளியம்பலவாண முனிவர், டாக்டர் திரு. இரா. செல்வக்கணபதி - சம்பந்தசரணாலயர், வித்துவான் திருமதி. ப. நீலா எம். ஏ., எம். ஃபில்., தமிழாகர முனிவர், வித்துவான்

திரு. கா. ம. கண்ணப்பன் எம். ஏ., பி. எட்., அழகிய திருச்சிற்றம்பல முனிவர். வித்துவான் திரு. சொ. முத்தையன் எம். ஏ., படிக்காசு முனிவர், திருமதி. மீரா கிருஷ்ணமூர்த்தி எம். ஏ., எம். ஃபில்., - சிதம்பரநாத முனிவர், திரு. சா. கிருஷ்ணமூர்த்தி எம். ஏ., - சிவானந்த முனிவர், வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ., -சிவப்பிரகாச முனிவர், புலவர் திரு. கே. கணபதி-, சண்முக சுவாமிகள் பற்றி உரை நிகழ்த்தினர்.

நண்பகல் 1 மணிக்கு மாகேஸ்வரபூஜை நடைபெற்றது. மாலை 6 மணிக்கு வேலூர் திரு. சொக்கலிங்க ஓதுவார், சீகாழி திரு. சா. திருஞானசம்பந்தம் ஆகியோர் திருமுறை இசையரங்கு நிகழ்த்தினர். இரவு 8 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி சிறப்பு வழிபாடு செய்தருளினார்கள்.

ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி
நினைவுச்சிறுகதைப் போட்டி பரிசளிப்பு

ஞானசம்பந்தம் இதழ்வாயிலாக அனைவர்க்கும் தெரிவிக்கப்பட்டிருந்த சிறுகதைப் போட்டிக்கு வந்திருந்த கதைகளில் தேர்ந்தெடுக்கப் பெற்ற மூன்று கதைகளின் ஆசிரியர்க்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ரொக்கப் பரிசுகள் வழங்கி ஆசி அருளினார்கள். முதற்பரிசுக் கதையான 'ஞானப்பிரசாதம்' ஆசிரியர் திரு. ஆர். பாலசுந்தரம் அவர்களுக்கு ரூ. 1001-ம், இரண்டாம் பரிசுக்குரிய கதையான 'அந்தச்சிரிப்பு' ஆசிரியர் திரு. திருச்சி பாரதன் அவர்கட்கு ரூ. 501-ம், மூன்றும் பரிசுக்குரிய கதையான 'ஞானம்பிறந்தது' ஆசிரியர் திருமதி. லட்சுமி நடராசன் அவர்களுக்கு ரூ. 251-ம், ரொக்கப் பரிசுகளாக வழங்கப்பெற்றன. கதை ஆசிரியர் கதையின் சிறப்பு அம்சங்களை விளக்கியும் கதை வழி சமயக் கருத்துக்களை மக்கள் மனத்தில் வேரூன்றச் செய்யும் உத்திபற்றியும் உரைநிகழ்த்தினர். விழாமலராக முத்திராலட்சணம் நூல் வெளியிடப்பெற்றது,

குருபூஜை நினைவு விழா

கயிலைக் குருமணி முத்திப்பேறெய்திய ஸ்ரீ காசியம்பதியிலும், அவர்கள் இறுதியாக வழிபாடாற்றிய சென்னை மயிலாப்பூர்த் திருக்கோயிலிலும் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன. மயிலாடுதுறை தெய்வத் தமிழ் மன்றத்தில் கயிலைக் குருமணி நினைவுவிழா கொண்டாடப்பெற்றது. திருச்சிராப்பள்ளி உருமு தனலட்சுமி கல்லூரி முதல்வர். திரு. சொ. சத்தியசீலன் எம். ஏ., குருவருளும் திருவருளும் பற்றி உறையாற்றினர்.

எதிர்காலம்

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.

(குரோதனஞு கார்த்திகைமீ 1௳ முதல் 30௳ முடிய)

(16—11—1985 முதல் 15—12—1985 முடிய)

ஸ்ரீ குரோதனஞு கார்த்திகைமீ 1௳ ஸ்திரவாரம் பூராட நக்ஷத்திரம் பவகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 18 நாழிகை 19 விஞடிக்கு கும்பலக்கினத்தில் ஸ்ரீ லோகரட்சகரான சூரியபகவான் லோக சுபிட்சார்த்தத்தை முன்னிட்டு துலாராசியிலிருந்து விருச்சிகராசி சங்கிரமணமான கார்த்திகைமாதப்பிரவேசம் செய்தருளுகின்ருர். அன்று முடவன்முழுக்கு விசேஷம். சங்கிரமண காலகிரக ஸ்திதியினுல் லோகில் பூமி செழிக்கும். தானியங்கள் அதிகம் உண்டாகும். பசு பால் விருத்தியாகும். பிரஜைகளுக்கு பொருளாதாரம் மிகுந்து ஏற்படும். தேசங்களில் ஆன்ருேர்களினுல் பொதுநல தர்மங்கள், ஆலயத்திருப்பணிகள் சிவபுண்ணிய கைங்கர்யங்கள் வெகுவாக நடந்துக்கொண்டிருக்கும். லோக சுபிட்சம் நன்ருக இருந்துவரும். உலகெங்கும் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் மாதவமுனிவர்களாகவந்து இறைவனே தியானிக்கின்ற சிவஞானகுருமகான்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்கள் ஜெகத்குருமகான்கள் லோகத்திற்கு இருள் நீங்க ஞானமணிமொழிகள் தம் திருவாய் மலர்ந்து சொற்பொழிந்தும் சகலமாந்தர்களும் சிவநெறி நன்மார்க்கத்தில் சிறப்பு அருளுபதேசம் செய்தும் சிஷ்யகோடிகளுக்கெல்லாம் ஆசிர்வாதம் செய்தும் பிரசாதம் வழங்குவர். தேசங்களில் எங்கும் தேவாலங்களில் ஆலய ஐதீகங்களில் சிறப்பாக பூசனைகள் நடைபெறும். பக்தகோடிகள் பக்தி பரவசத்தில் இறைவழிபாடு செய்து திரிகரண சுத்தமாய் வாழ்வர்.

1. மேஷம் :- அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் வெகுவாகவரும். வித்வத்துவம் கலைத்துறைகளில் புகழ்தரும். பொதுநலகாரியங்கள் சுப விசேஷ காரியங்களை ஏற்று நடத்தச் செய்யும். டிஸம்பர் 7வ அளவில் அரசாங்கத்திலிருந்து நல்ல விஷய செய்தி வரும். பூமி இயந்திரவாகனங்களில் விருத்தி பலன் ஏற்படும். எல்லா காரியங்களும் வெற்றிகரமாக நடக்கும். தாரபுத்திரர்களின் சுகம் நன்றாக இருந்து வரும். டிஸம்பர் 10, 11, 12 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

2 ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி - மிருகசீரிஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் கணிசமாக வந்துகொண்டிருக்கும். வித்தியாவியாபா ராதிகளில் எழுத்துமூல விஷயங்களில் நற்பலனை ஏற்படுத்தும். வீடு வாகனங்களின் பிராப்தியில் நல்ல சௌகரியம் தரும். மனைவியின் உடல் பாதிக்கினும் உடன் குணமாகும். முயற்சியில் உள்ள எல்லா காரியங்களும் வெற்றிகரமாகும். புத்திரருக்குஉயர்வு தரும். நவம்பர் 16 டிஸம்பர் 13, 14 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

3. மிதுனம் :- மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். பண வருமானம் வெகுவாக வரும். இரத்தினபூஷணம் தரும். டிசம்பர் 7 வக்குமேல் பசு பால் பிராப்தி நல்ல வாகன பிராப்தியளிக்கும் வித்தியாவியாபாராதிகளில் கலைத்துறையில் முன்னேற்றஸ்திதியை உண்டுபண்ணும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்து வரும். எல்லாக்காரியங்களும் வெற்றியாக நடந்துகொண்டிருக்கும். நவம்பர் 17, 18, 19 டிசம்பர் 15 இத்தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

கடகராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் நான்கு வகையில் வரவாகும். நல்விஷயங்களில் ஊக்கம் மனோபலம் தரும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் விசேஷபலன் ஏற்படும். பூமியந்திரங்களில் நற்பலன் ஏற்பட்டு வரும். புதிய வாகனம் தரும். எல்லாகாரியங்களும் வெற்றியாக நடந்துவரும். நவம்பர் 20, 21 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

5. சிம்மம் :- மகம் – பூரம் – உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் வெகுவாக வரும். உறுதிவாக்களித்தல் காரிய சாதனை யாகுதல் ஆகும். நவம்பர் 29 ல் சகோதரருக்கு ஓர் நற்பலன் உண்டாகும். வீடுவாகன பிராப்தியில் நல்ல சௌகரியம் தரும். வித்தியா வியாபாராதிகளில் நற்பலன் வரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். எல்லாகாரியங்களும் இஷ்ட சித்தியாக நடந்துகொண்டிருக்கும். நவம்பர் 22, 23 தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய், புதன் சுபம்.

6. கன்னி :- உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½

கன்னிராசி 9 பாதங்களும் நற்பலனாக்நடக்கும். பண்வருமானம் நல்ல விதத்தில் வந்துசேரும். இரத்தின பூஷணம்தரும். நல்ல வாகன பிராப்தியையளிக்கும். விவாக சுப காரியங்களை நடத்தும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் மேன்மை ஸ்திதியை யளிக்கும். உத்தியோகத்தில் பதவி உயரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். நவம்பர் 24, 25 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்.

7. துலாம் :- சித்திரை ½ – சுவாதி - விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பணவருமானம் பல விதத்தில் வரும். நெருக்கடியாக பல விதங்களில் பணம் முடங்கவும் செய்யும். வித்வத்துவம் கலைத்துறைகளில் நன்மதிப்பு தரும். வீடுவாகன பிராப்தியில் நல்ல சௌகரியம் இருந்துவரும். புத்திரருக்கு அரசாங்கத்தில் நல்லன ஏற்பட்டுவரும். மந்த ஸ்திதியில் இருந்த எல்லாகாரியங்களும் நல்லவிதமாக நடக்கும். நவம்பர் 27, 28 தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ – அனுஷம் – கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் வந்துகொண்டிருக்கும். பூமி பிராப்தியில் நற்பலன் ஏற்பட்டு வரும். வித்தியா வியாபாராதிகளில் கலைத்துறையில் பிரசித்தம் ஏற்படும். எல்லாகாரியங்களையும் சாஸ்திரோக்தமாக நடத்திவரும். வாகன சுகம் திருப்தியளிக்கும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். நவம்பர் 29, 30 டிசம்பர் 1 இத்தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர்ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனை நடக்கும். பண வருமானம் வெகுவாக வந்துகொண்டிருக்கும். அதற்கேற்ப கௌரவ செலவினங்களும் ஏற்பட்டுகொண்டிருக்கும். வித்தியா வியாபாராதிகளில் கலைத்துறையில் பிரபலம் ஏற்படும். எல்லா காரியங்களும் அரச கண்யத்தில் சிறப்பாக நடந்துவரும். தார புத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். டிசம்பர் 2, 3 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும் சுபபலனை நடக்கும். பணவருமானங்கள் வெகுவாக வந்துகொண்டிருக்கும். வித்தியா வியாபாராதிகளில் கலைத்துறையில் நற்பலன்வந்துகொண்டிருக்கும். வீடுவாகன பிராப்தியில் நல்ல சௌகரியம் இருந்துவரும். புத்திரிக்கு சுபம் ஏற்படும். தாம்பத்திய வாழ்க்கை சுமுகமாக நடந்துவரும். எல்லா காரியங்களும் நன் முறையில் நடந்துவரும். டிசம்பர் 4, 5 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾

கும்பராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். பண வருமானம் வரும். அதற்கேற்ப சுபகாரியசெலவுகளும்ஏற்படும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் அரசாங்கத்தில் கண்யம்தரும். இயந்திர சாதனங்களில் நல்லன ஏற்படும். சாலையில் ஓர் விபத்து ஏற்பட்டு தப்பும். பெற்றோர் உடல் நலம் பாதிக்கினும் உடன் குணமாகும். டிசம்பர் 6, 7 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

12. மீனம் :- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் மிச்சிரபலனை நடக்கும். பண வருமானம் வந்துகொண்டிருக்கும். நவம்பர் 29உ முதல் சகோதரரின் பிரம்மை போன்ற திகைப்பு நீங்குவதாகும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் சிறப்பும் மேலோரால் நன்மைகளும் ஏற்படும். எல்லா காரியங்களையும் சுறுசுறுப்புடன் செயல்படுத்திவரும். தார புத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். டிசம்பர் 8, 9 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

சிவமயம்

"ஞானசம்பந்தம்"

44 ஆம் ஆண்டு மலர்ப் பொருளடக்கம்

எண்	தலைப்பு	பக்க எண்
1	அகத்தி	820
2	அத்தி	770
3	அப்பூதி அடிகள்	286
4	அபிராமி அந்தாதி	50, 99, 141, 214, 269, 317, 581, 637, 698, 751, 807, 863
5	அமெரிக்காவில் திருக்கோயில்கள்	871
6	அரசாங்கம் பற்றி அறிஞர் பெருமக்கள்	343
7	அறமும் உழவும் வாழவழி	189
8	அறுகம்புல்	88
9	அன்பகம் ஓர் அறிமுகம்	226
10	ஆடாதோடை	294
11	இதயம் பற்றி	612
12	இதழ்வழிச் சமயப்பயிற்சித் திட்டம்	84
13	இதழ்வழி சைவ சமயப்பயிற்சிப் பாடம்	181, 245, 309, 357, 613, 671, 727, 783, 839, 895,
14	இயக்குநர் நியமனம்	63
15	இரா. செல்வக்கணபதிக்கு டாக்டர் பட்டம்	64
16	உப்பின் உபயோகம்	315
17	உலகக் குழப்பம் தெளிய மருந்து	679

எண்	தலைப்பு	பக்க எண்
18	எதிர்காலம்	65, 112, 178, 241, 304, 352, 608, 666, 723, 777, 834, 887
19	எல்லாமும் வல்ல சித்தர்	92
20	கதிரவன்குடும்பம்	43, 103, 151, 229, 278, 349. 655, 695,
21	கடிதம்	42, 116, 164, 180, 607, 749, 782, 821, 871, 877
22	கடுக்காய்	இதழ் 4 - I
23	கயிலைக் குருமணி நினைவுச் சிறுகதைப்போட்டிப் பரிசளிப்பு	806
24	கள்ளமாய் வாழ்கின்றாய் கல்நெஞ்சே	636
25	கலிங்கத்துப்பரணி	824
26	காந்தி நெறி	750
27	காரைக்காலம்மையார் ஓர் சமயப்புரட்சிவாதி	657
28	காலங்கள் மாறட்டும் கண்கள் திறக்கட்டும்	28
29	காவிரிவளம் அன்றும் இன்றும்	621
30	கும்பகோணம் குடமுழுக்குக்காண வாரீர்	847
31	குருபூசைவிழாக் காணவாரீர்	301
32	குருமணி நின் திருத்தாள் போற்றி	262
33	குலச்சிறை நாயனார்	165
34	சமுதாயக் கட்டுக்கோப்பில் சரண்புகு	285
35	சிவஞான முனிவரின் பேருரைத்திறன்	708
36	சிவப்பிரகாச சுவாமிகள்	31
37	சிவபூசையின் சிறப்பு	154
38	சுதந்திரதேவி துதி	694
39	செய்திகள்	55, 106, 173, 238, 297, 345, 597, 663, 718, 772, 829. 884
40	சைவசித்தாந்தப் பயிற்சிவகுப்பு	292
41	சைவம் கண்ட பகுத்தறிவு	766
42	ஞானப்பிரசாதம்	856
43	தமிழர் வாழ்வின் இதயமாய் வளரும் ஏடு	14
44	தமிழ்நாடு இந்து ஆலயப் பாதுகாப்புக் கமிட்டி	580

எண்	தலைப்பு	பக்க எண்
45	தவத்திரு குன்றக்குடி அடிகளார் மணிவிழா	565
46	தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் ஆசியுரை	6, 75, 129, 194, 257, 305, 570, 626, 683, 739, 798, 851.
47	திருக்கண்டியூர்க் கல்வெட்டுக்கள்	816
48	திருஞானசம்பந்தர்	658, 689, 744, 800, 880
49	திருஞானசம்பந்தரும் குருநானக்கும்	17
50	திருத்தருமையாதீனச் சிறப்பு	338
51	திருத்தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் கோயிற் பெருவிழா அழைப்பு இதழ்	6 - க
52	திருத்தலங்களின் சிறப்பு	223
53	திருநாவுக்கரசர்	15, 117
54	திருப்புறவார் பனங்காட்டூர்த் தலச்சிறப்பு	715
55	திருமாணிகுழித் தலச்சிறப்பு	265,311
56	திருமுண்டீச்சரத் தலச்சிறப்பு	576
57	திருவருட்பாத் திரட்டு	47, 96, 146, 219, 274, 321, 586, 645, 711, 755, 812, 867
58	திருவாமாத்தூர்த் தலச்சிறப்பு	630
59	நால்வர் காலம்	65, 112, 281, 326, 590, 642
60	நாவலரின் நற்சிந்தனை	124
61	நினைவுகூர்வோம் நெறி நிற்போம்	791
62	நீரெலாம் காய்ந்தபின்னும் நினைவுகள் காயவில்லை	805
63	நீலநக்கர்	333
64	நெல்லி	669
65	பக்தி செய்வோம் பாரினில் உயர்வோம்	1
66	பதினொரு திருமுறைகள் வகுத்தகாலம்	702, 760
67	பாரதப் பிரதமரை வாழ்த்துவோம்	735
68	பான்மையுள்ள மந்திரம்	140
69	பிரார்த்தனைப் பலன்	725

எண்	தலைப்பு	பக்க எண்
70	பீடுநடை ஏடு வாழ்க	25
71	பெரியபுராணம் பன்னிரண்டாம் திருமுறை	158, 205
72	பெருமிழலைக்குறும்பர் - பேயார்	231
73	மதிப்புரை	90, 781
74	மதுரைக் கோயிலின் மாட்சி	26
75	மான்புமிகு இராசாராம் அவர்கள் பேருரை	79, 136, 200
76	மாதவச் சிவஞானமுனிவர்	253
77	மூவர்தமிழில் முருகன்	35
78	மௌனமாய்ப் பேசும் மூர்த்தி	342
79	வரவேற்பியற் கவிதை மலர்	85
80	வருக வருக! வளர்க வாழ்க!	69
81	வழிகாட்டும் புத்தாண்டு	264
82	வாக்குண்டாம் - ஒரு மருத்துவமும் உண்டு	743
83	விஞ்ஞானம் நிரூபிக்கிறது	301

அனைத்துலகச் சைவசித்தாந்த
ஆராய்ச்சி நிறுவனம்
இதழ்வழிச் சைவசமயப் பயிற்சி
பாடம் - 10.

பன்னிரு திருமுறைகள்

திருநெறியாம் கடவுள் நெறியில் - இன்ப துன்பங்களை ஒப்பக் கருதும் திருத்தகவிற்றாகிய நெறியில் - நம்மைச் செலுத்துவன - திருமுறைகள். இச்சொல்லை இன்னும் சில அமைப்புக்களாகவும் அணுகலாம்.

இம்மை மறுமைச் செல்வங்களை முறையாகத் துய்க்கத் தூண்டுவன - திருமுறைகள். திருநெறிகாட்டும் நூல்கள்- திருநின்ற செம்மையுடையோரின் - கேடும் ஆக்கமும் கெட்டதிருவுடையோரின் அருள்நெறிகளை விளக்குவன திருமுறைகள் எனலாம்.

திரு என்றால் செல்வம் - பின்னும் அது சென்றடையாத திருவாம் முத்திச் செல்வத்தையும் குறிக்கும். திரு - சிவத்தையும், சிவனருளையும், அவ்வருளால் எய்தும் பேரின்பத்தையும் குறிக்கும். முறை என்பதற்கு நூல் என்பதுபொருள். ஆகவே அழியும் செல்வம் கொண்டு அழியா முத்தியடைய வழிகாட்டுவன திருமுறைகள் என்ற அருள்நூல்கள்.

திருமுறைகள் கிடைத்த கதை :

மாமன்னன் இராசராசன் அவ்வப்போது சிலராலும் பலராலும் பாடப்பட்டுவந்த திருமுறைகளைச் செவிமடுத்து மகிழ்ந்து அவைகளை முழுமையாகப் பெறவழியுண்டா என்று கவன்று கொண்டிருந்த போது திருநாரையூர்ப் ' பொல்லாப் பிள்ளையாரின் ' அருள்பெற்ற நம்பியாண்டார் நம்பிகளின் புகழ் செவியில் பட்டது. உடன்அவரை அணுகி தன்குறை முடிக்க விண்ணப்பித்தான். அவரும் வழிபடு தெய்வமான பிள்ளையார் அருளிச் செய்தபடி - தில்லையிலே அடை பட்டுக் கிடந்த தேவாரப் புதையலைப் பெற வழிகாட்டினார். இச்சீர்த்திமிகு செயல் வரலாற்றில் இடம்பெற்றது. திருநாரையூர் நம்பியாண்டார் நம்பியைக் கொண்டு, தில்லையில் பூட்டி வைக்கப் பட்டிருந்த முதல் ஏழு திருமுறைகளைத் தொகுப்பித்த இவன் சிவபாதசேகரன் என்று பெயர் பெற்றான். இவன் காலமுதல் திருமுறைகள் நாடெங்கும் பரவலாயின.

திருமுறை கண்ட சோழனாக மாறிய இவன் காலத்தில் ஒன்று முதல் பதினொரு திருமுறைகளும் வகுக்கப் பெற்றன. இப்படிக் கூறும் திருமுறைகண்ட புராண ஆசிரியர் உமாபதி சிவத்தின் கூற்றுக்கு மாறாக -

நம்பி தன் திருவந்தாதியில் ஆதித்தன் என்ற மன்னனையே குறிக்கிறார். இராசராசனை எங்கும் சுட்டவில்லை. அந்த ஆதித்தன் விசயாலயனின் புதல்வனே. இவன் காலத்திலும் பின் முதற் பராந்தகன் காலத்திலும் அதாவது 9-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 10-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இருந்தவர் நம்பியாண்டார். அதோடு இவர் காலத்திற்குப் பின்பு வந்த அருளாசிரியர்கள் வாக்குகள் ஒன்பதாம் திருமுறையில் காணப் படுவதால் இவற்றைத் தொகுத்தவர் பின்வந்த யாரோ ஒருவரே எனல் வேண்டும். ஆக எட்டுமுதல் பதினொரு திருமுறைகளைத் தொகுத்த செயல் நம்பியுடையது அல்ல என்பதை - சதாசிவ பண்டாரத்தார் போன்றோர் காட்டுகிறார்கள் - இதனை மனங் கொள்ளல் வேண்டும்.

தேவாரம் – சொல்விளக்கம் :

மூவர் பாடல்களையே தேவாரம் எனறு குறிக்கிறார்கள். ஆனால் ஞானசம்பந்தர் பாடலுக்குத் 'திருக்கடைக்காப்பு' அப்பர் - பாடலுக்குத் 'தேவாரம்' சுந்தரர் பாடலுக்குத் 'திருப்பாட்டு' என்ற தனித்தனிப்பெயர்களும் வழக்கத்திலிருந்தன என்பது காலத்தால் மறைந்து கொண்டிருக்கிறது.

தேவ+ஆரம் - இறைவனுக்கான மாலை

தே+வாரம் - தெய்வத்திடம் அன்பை விளைப்பது

தே - தெய்வம் - வாரம் என்பது இசைப்பாடல்.

வாரம்பாடுதல் என்பது இசைப்பாடலால் கடவுளை வழிபடுதல்என்ற பொருளில் சிலப்பதிகாரத்தில் வருகிறது.

'' சீரியல் பொலிய நீரல நீங்க
வாரம் இரண்டும் வரிசையிற் பாட ''

இதன்பின் 'பண்' பொருந்தியபாடல் தேவபாணியாயிற்று. இத் தேவபாணி என்ற பெயரை யொட்டியே தேவாரம் என்ற பெயர் தோன்றியிருக்கவேண்டும்.

11 - 12 ஆம் நூற்றாண்டுக்கல்வெட்டுகள் தேவாரம் - வழிபாடு என்ற பொருளோடு வந்தன. முதன்முதலில் 13-ஆம் நூற்றாண்டில் இரட்டையர்கள் தேவாரம் என்ற சொல்லை மூவர் முதலிகளின் பாடலுக்குத்தந்தார்கள். அதுகூட வினைநிலையிலேயே அமைந்தது. பின் எல்லப்பநாவலர் 'வாய்மை வைத்த சீர்த்திருத் தேவாரமும்'

எனப்பெயரால் குறிப்பிட்டார். சோழர்கள் வழிபட அமைத்துக் கொண்ட இறைவன் 'தேவாரதேவர்' எனப்பட்டான். பூசையிடம் 'தேவாரத்துச் சுற்றுக்கல்லூரி' - இசைத்தொண்டு செய்வோர் 'தேவார நாயகம்' - என்றெல்லாம் கல்வெட்டுக்களில் வந்தன.

மூவர் தேவார அமைப்பு :

திருஞானசம்பந்தர் பாடிய 384 பதிகங்கள் முதல் மூன்று திருமுறைகளாயின. இவரை மூன்று வயதில் 'பால்' கொடுத்து - கலைஞானத்தால் உணர்வரிய மெய்ஞ்ஞானம் தந்து ஆட் கொண்டான் இறைவன். அதனோடு அவனே இவருள்ளிருந்து பாடல்களையும் பாடுவித்தான் என்பதறிகிறோம்.

'எனதுரை' தனதுரையாக' என்பார் சம்பந்தர். வேதங் களையே எழுதும் மறையாகத் தமிழில் பாடினர் இவர் - எனச் சேக்கிழாரும் கூறுவார். முதலில் இவர் பாடல்கள் அமைய

1. திருவடியடைந்தவர்களில் இவரே முதலாமவர்

2. பெருமானது திருவருளை முதன்முதலில் போற்றியவர்

என்றும் சுட்டுவார்கள். அதிக அளவிற்கிடைத்த பதிகஅமைப்பும்- ஒரு காரணமாகலாம். பண்ணோடு கூடியது இவர் பாடல். இதனை 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தர்' என்று பின்வந்த சுந்தரர் வாக்கும் உறுதிப்படுத்தும். பின்னே வரும் பட்டியலில் பாடல் - தொகை போன்றவைகளை அறியலாம். பல்வேறு அற்புதங்களை இவர் செய்துள்ளார் என்பதைச் சுருக்கச் சிந்தனையாக்குகிறது ஒருபாடல்.

புனலில் ஏடெதிர் செல்லெனச் செல்லுமே
புத்தனர் தலைதத் தெனத், தத்துமே
கனலில் ஏடிடப் பச்சென் றிருக்குமே
கதவு மாமறைக் காட்டில் அடைக்குமே
பனையில் ஆண்பனை பெண்பனை ஆக்குமே
பழைய என்புபொற் பாவைய தாக்குமே
சினவரா விடந், தீர்கெனத் தீர்க்குமே
சிறந்த சம்பந்தர் செந்தமிழ்ப் பாடலே.

திருநாவுக்கரசர் அருளியவை :

4, 5, 6, திருமுறைகளாகும். மொத்தம் 313 பதிகங்களாக இருப்பவை 4-ஆம் திருமுறையில் பண்ணமைப்புடன் இருக் கின்றன. 5 சீர்கொண்ட திருநேரிசை 5 சீர்கொண்ட திருவிருத்தங் களாகும் இப்பாடல்கள். 5 ஆம் திருமுறையிலிருப்பவை எல்லாம் 4 சீர்கொண்ட கலிவிருத்தப்பாக்களே, இவை திருக்குறுந்தொகை

எனப்படும். 6ஆம் திருமுறை முழுமையும் 8 சீர்கொண்ட தாண்டகப் பாவால் அமைந்தது. இத்தகு பாடல் திறம் அப்பரைத் 'தாண்டக வேந்தராக' ஆக்கியது.

இறைவன் தந்த 'அருட்சூலை' சமணக்கடல் தப்பி சைவக் கரையேறச் செய்தது. பின்பு நாமார்க்குங் குடியல்லோம் என்று உழவாரப்பணி செய்து உளமகிழ்வு கொண்டு 81 வயது வரை நிலவுலகில் இருந்தார். மண், பெண் பொன்னாசை துறந்த நடையருப் பெருந்துறவின் தவவேந்தர் இவர் எனலாம்.

தலை கொள் நஞ்சமுதாக விளையுமே
தழலின் நீறு தடாகம தாகுமே
கொலைசெய் யானை குனிந்து பணியுமே
கோள ராவின் கொடுவிடந் தீருமே
கலைகொள் வேத, வனப்பதி, தன்னுளே
கதவு மீண்டு கடுகத் திறக்குமே
அலைகொள் வாரியில் கல்லும் மிதக்குமே
அப்பர் போற்றும் அருந்தமிழ்ப் பாடலே

என்று அப்பர் செய்த அற்புதங்கள் தொகுத்துக் கூறப்பட்டன.

சுந்தரமூர்த்தி அருளியவை :

7 ஆம் திருமுறையாக அமைந்த இதன்கண் 100 பதிகங்கள் பண்ணமைப்புடன் உள்ளன. சம்பந்தர், அப்பருக்குக் காலத்தால் பிந்தியவர் இவர். திருக்கயிலையிலிருந்து வந்து மண்ணுலகில் பிறந்து அவனை வாழ்த்தும் வழியடியார் பொன்னுலகு செல்ல முடியும் என்பதனைச் செயல்வழி காட்டினவர். இறைவனைத் தோழமை கொண்டவர் பித்தா-என்றருளிய குறிப்பால் 'தேவாரத் தினையும்' தில்லைவாழந்தணர்-என எடுத்துத்தந்த வகையால் 'திருத்தொண்டத் தொகையினையும்' செய்தருளினர். இதன்மூலம் தான் சைவாசிரியப் பெருமக்கள் வரலாறு நமக்குக் கிடைத்தது. சைவத்தின் மூலபண்டாரம் என்றமையும் இதனைப்பின் 'நம்பி' அந்தாதியாகவும் பின்பு சேக்கிழார் பெரியபுராணமாகவும் வகை, விரி நூலமைப்பில் செய்தருளினர்.

அறுபத்துமூன்று தனியடியார்களும் ஒன்பது தொகையடியார் களுமாகஎழுபத்திரண்டுஅடியார்கள்இதனுள்குறிக்கப்படுகின்றனர்.

'தேசமுய்யத் திருத்தொண டத்தொகை முன்பணித்த திருவாளன்' என்று சுந்தரரைச் சேக்கிழாரும் குறித்துப் பாராட்டுவார்.

வெங்கரா வுண்ட பிள்ளையை நல்குமே
வெள்ளை வாரண மீதில் இருத்துமே
மங்கை பாகரைத் தூது நடத்துமே
மருவி ஆறு வழிவிட்டு நிற்குமே

செங்க, லானது தங்கம தாகுமே
திகழும் ஆற்றிட்ட செம்பொன் னளிக்குமே
துங்க வான்பரி சேரற்கு நல்குமே
துலங்கு சுந்தரர் செந்தமிழ்ப் பாடலே

மாணிக்கவாசகர் அருளியவை :

எட்டாந்திருமுறையாகிய இதனுள் திருவாசகம்-திருக்கோவை என்ற இரண்டு நூல்களும் உள்ளன. திருக்கோவையைக் கோவைத் திருவாசகமென்றே கூறுவார். 'பாவை பாடிய வாயினல் கோவை பாடுக' என்று தூண்டுதல் செய்து இறைவன் இதனைப்பெற்றான்.

தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் — கோவைத்
திருவா சகமுந் திருமூலர் சொல்லும்
ஒருவாசகமென் றுணர்

என்ற வெண்பா தமிழின் உயர் நூல்களைப் பட்டியல் செய்கிறது. அதில் முனிமொழி வியாசரின் மொழி எனல்வேண்டா. முன்னி மொழியும் கோவை என-இறைவன் தூண்டியபின் கருதிச்சொல்லப் பட்ட - (பேரின்பம் பொதுள) 'கோவை' என்பதன் அடையாகவே அதனைக் கொள்ளல் நன்று. முன்னி-முனி எனத்தொகுத்துவந்தது. தேவாரதிருவாசகம் என்று மெண்ணுமமைப்பும் இடைப்பிறவராமல் -தொடர்புடையதாகும்.

இவரை மூவருக்குப் பிந்தியவர் என்பாரும் முந்தியவர் என்பா ருமுண்டு. மூவர் இவரைச் சுட்டாமையால் பிந்தியவர் எனுங் கூற்றுக்குள்ள வலிமை போலவே இவர் மூவரைச் சுட்டாமை இவரை முந்தியவராக ஆக்கும் வலிமை பெறுகிறது. ஆனாலும் பல்வேறு காரணங்காட்டி திரு. வெள்ளைவாரணனர் இவரை முதல் வரகுணனின் காலமென்றே கி. பி. 792-835 சுட்டுகின்றார். இறைவனின் கருணையை - தமது எண்ணருஞ் சிறுமையைத் தக்க வாறு தக்கவிடங்களில் வெளிப்படுத்துவார் கல்லைக் கனிவிக்கும் உருக்கமுடைய பாடல்களால் தொடுமணற் கேணிபோல கண்கள் சுரந்து நிற்கும் காட்சி காணற்குரியதே நீத்தல் விண்ணப்பித்தல்,

ஏசினும் யான்உன்னை ஏத்தினும் என்பிழைக்கே குழைந்து
வேசறுவேனை, விடுதிகண், டாய்செம் பவளவெற்பின்
தேசுடை யாயென்னை ஆளுடை யாய்சிற் றுயிர்க்கிரங்கிக்
காய்சின ஆலமுண்டாய் அமுதுண்ணக் கடையவனே

இறைவனைத் தேசுடையாய்! ஆளுடையாய்! என விளிப்பதோடு அமுதுண்ணக் கடையவனே! என்றும் விளித்தார் எனல் நன்று. சிற்றுயிர்களாம் தேவருய்ய காய்சின ஆலமுண்டமை - அவனருளைக் காட்டுகிறது. அப்படியானவன் அமுதுண்ணக் கடையவன்ஆகிருன். அதாவது அமுதை உண்ணுதவன் என்பது பொருள். யான் ஒரு செயலைச் செய்யவில்லை - என்பதனை அதனைச்செய்ய நானே கடைசி ஆளாக இருப்பேன் - I will be the last person to do it என்பது போன்ற அமைப்புடையது இத்தொடர். ஆதிஆனவன் - அந்தம், கடையவன் என்பதும் வழக்கத்திலுள்ளனவே. ஏத்துதற்கு வேசறு வானேன்! எல்லையற்ற பொருள் சேர் புகழில் இன்னன் என உணர்தல் எங்ஙனம் முடியும்? எப்படிப் புகழ்ந்தாலும் குறைபடவே முடிகிறது என்ற ஆதங்க உணர்வு வெளிப்படப் பேசுகிருர். கடையவன் என்பதனை முதலில் உள்ள 'யான்' என்பதனுடன் சேர்ப்பதைக் காட்டிலும் அதிகப் பொருள்நயம் மேற்கண்டவாறு பொருள்காண விளங்குகிறது என்பார் நா. ரா. முருகவேள். இப்படி யான பாடல்கள் நிறைந்ததே 8-ஆம் திருமுறை.

9 ஆம் திருமுறை திருவிசைப்பா திருப்பல்லாண்டு இரண்டும் சேர்ந்தது இத்திருமுறை. பண்ணமைப்புடன் கூடிய இந்நூலில் திருவிசைப்பாப்பாடிய சேந்தனரே திருப்பல்லாண்டும் பாடியுள்ளார். கருவூர்த் தேவர் அதிகமான பாடல்களைப் பாடியுள்ளார். ஒன்பதின்மர் பாடியுள்ள இசைப்பாடல் தொகுப்பிதுவாகும்.

10 ஆம் திருமுறை திருமந்திரம் - திருமூலர் ஆசிரியர். தமிழ் மூவாயிரம் என்ற பெயருமுண்டு. இதுவொன்றே தோத்திரமாகவும் சாத்திரமாகவும் அமைந்த சிறப்புடையது. 3000 ஆண்டுகள் இருந்து அத்துணைப்பாடல்களும் பாடினர் என்பது வரலாறு.

11 ஆம் திருமுறை பன்னிரண்டு அருளாளர்கள் பாடிய தொகுப்பு. திருவாலவாயுடையானுய் இறைவன் அருளிய பாசுரம் முதலாக காரைக்காலம்மை - பட்டினத்தார் - நக்கீரர் போன்றவர் களின் பாடல்களை யெல்லாம் அடக்கிக் கொண்டது இது. நம்பியாண்டாரின் பாடல்களும் இதனுள் அடங்கியுள்ளன.

12 ஆம் திருமுறை திருத்தொண்டர் மாக்கதையென்ற பெரிய புராணம் இதுவாகும். 'உலகெலாம்' என்று அடியெடுத்துக் கொடுத்த இறைவனருள்வழி பாடப்பட்டது இது. இவ்வரலாறு களுக்கு மூலகாரணமான சுந்தரரையும் தனியடியாரில் ஒருவராக ஆக்கிக் கொண்டார் சேக்கிழார் - நம்பியாண்டார் வழியில் சுந்தரரின் தாய் - தந்தை இருவரையும் சேர்க்கத் தனியடியார்கள் அறுபத்துமூவர் ஆனர்கள்.

வினக்கள்:

1. திருமுறைகள் எத்தனை ? இச்சொற்பொருளை வல்லவாறு விளக்குக.
2. தேவாரம் - யாருடையது ? மற்றையோர் பாடல்களை எப்படிக் குறிப்பிடுவது வழக்கம் ?
3. திருநாவுக்கரசரின் தமிழ்செய்த சிறப்புக்களைக்குறிக்க.
4. மணிவாசகர் பாடல்கள் எத்தகையன ? அவை எந்தத் திருமுறையில் அடங்கும் ?
5. பதினொராம்திருமுறையில் அமைந்த நூல்களை எழுதுக.

திருமுறைகளும் அவற்றின் ஆசிரியர்களும்

	ஆசிரியர்	நூல்	வரிசை	பாடல் அளவு
1.	திருஞானசம்பந்தர்	திருக்கடைக்காப்பு	1, 2, 3	3041 பதிகம்
2.	திருநாவுக்கரசர்	தேவாரம்	4, 5, 6	313 ,,
3.	சுந்தரமூர்த்தி	திருப்பாட்டு	7	100 ,,
4.	மாணிக்கவாசகர்	திருவாசகம்-திருக்கோவையார்	8	656, 400 பாடகள்
5.	திருமாளிகைத்தேவர்	திருவிசைப்பா	9	4 பதிகம்
9.	சேந்தனர்	,,	,,	3 ,,
7.	கருவூர்த்தேவர்	,,	,,	10 ,,
8.	பூந்துருந்தி நம்பிகாடநம்பி	,,	,,	2 ,,
9.	கண்டராதித்தர்	,,	,,	1 ,,

	ஆசிரியர்	நூல்	வரிசை	பாடல் அளவு
10.	வேணாட்டடிகள்	,,	,,	1 ,,
11.	திருவாலியமுதனார்	,,	,,	4 ,,
12.	புருடோத்தமநம்பி	,,	,,	2 ,,
13.	சேதிராயர்	,,	,,	1 ,,
	சேந்தனார்	திருப்பல்லாண்டு	,,	1 ,,
14.	திருமூலர்	திருமந்திரம்	10	3000 பாடல்
15.	திருவாலவாயுடையார்	திருமுகப்பாசுரம்	11	1 ,,
16.	காரைக்காலம்மையார்	நூல்கள் - 4	,,	143 ,,
17.	ஐயடிகள் காடவர்கோன்	க்ஷேத்திரத்திருவெண்பா	,,	24 ,,
18.	சேரமான் பெருமாள்	நூல்கள் - 3	,,	131 ,,
19.	நக்கீரதேவர்	நூல்கள் - 10	,,	199 பாடல்
20.	கல்லாடதேவர்	திருக்கண்ணப்பதேவர் திருமறம்	,,	1 ,,
21.	கபிலதேவர்	நூல்கள் - 3	,,	157 ,,
22.	பரணதேவர்	சிவபெருமான் திருவந்தாதி	,,	100 ,,
23.	இளம்பெருமானடிகள்	சிவபெருமான் மும்மணிக்கோவை	,,	30 ,,
24.	அதிரா அடிகள்	மூத்தபிள்ளையார் - மும்மணிக்கோவை	,,	23 ,,
25.	பட்டினத்தடிகள்	நூல்கள் - 5	,,	192 ,,
26.	நம்பியாண்டார் நம்பிகள்	நூல்கள் - 10	,,	382 ,,
27.	சேக்கிழார்	பெரியபுராணம்	12	4286 ,,

கட்டுரை வழங்கியவர் :- **வித்துவான் திருமதி. ப. நீலா.**